The employers' organization, the CBI, and the unions' organizations, the TUC, also exert influence at national level through statements to the press and media. Other promotional pressure groups, such as the campaign for lead- free petrol and the anti- smoking lobby, use similar techniques.

Sometimes groups use less peaceful methods to impress their views on the public. Demonstrations, protest marches and sit-ins often lead to publicity on television or in the press. Business response to pressure groups. There are a number of ways businesses can respond to pressure groups.

1. Ignore them Businesses may argue that consumers can choose whether to buy the product or not. In the meantime they can make sure that their products meet all the necessary legal requirements.
2. Run a counter campaign to win public support. This is the policy adopted by British Nuclear fuels PLC. 'Come to sell a field. Look around the place See for yourself how safe it is'- loosely paraphrased, this is the message of a multi-million pound advertising campaign which British Nuclear fuels has used for several years.
3. Take advise from consumers and compromise in order to win back public support.

**Reference: w.w.w.investopedia.com**

T.Jeniththa
2014 Com

# முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

அனைத்து நிறுவனங்களிலும் அனைத்து செயற்பாடுகளிலும் முகாமைத்துவமானது ஏதேனும் ஒரு வழிமுறையில் தொடர்புபடுகின்றது. நிறுவனத்தின் செயலாற்றத்திற்கு நிலைபேற்றுத் தன்மைக்கு, வெற்றிக்கு முகாமையாளர்களின் பங்கு அளப்பரியது ஆகும்.

- உற்பத்தி முகாமையாளர்கள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புசெய்வர்
- மனிதவள முகாமையாளர்கள் வினைத் திறன் மிக்க ஊழியர்களை உருவாக்குவர்
- நிதி முகாமையாளர்கள் நிதி வளத்தினை திரட்டிக் கொள்வதில் பங்களிப்பு செய்வர்

இவ்வாறு நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் முகாமைத்துவம் ஏதேனும் ஒரு அடிப்படையில் பங்களிப்பு செய்கின்றது

அனைத்து சமூகங்களிலும் நிறுவனங்களிலும் அபிவிருத்திக்கு முகாமைத்துவம் அளப்பரிய பங்கினை ஆற்றுகின்றது

**முகாமைத்துவத்தின் வரைவிலக்கணம்**

முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரைவிலக்கணம் இல்லை. எனினும் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படும் வரைவிலக்கணங்கள் சில வருமாறு

1. "நிறுவனத்தில் வெளிப்படுத்தப்பட்டநோக்கங்களை நிறைவு செய்வதற்காக அந் நிறுவனத்தில் உள்ள மனித வளங்களையும், ஏனைய வளங்களையும் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் உள்ளடங்கிய செயற்பாடுகள் முகாமைத்துவம் ஆகும். James A.F. Stoner
2. "வேறு நபர்கள் மூலமாக வேலை செய்து கொள்ளும் ஒரு கலையே முகாமைத்துவம் ஆகும். Mary parkerfolet
3. "நிறுவனததின் நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ள தீர்வுகளை வழங்கும் தகவல்களின் சேர்க்கை முகாமைத்துவம் எனப்படுகின்றது. A Body of Knowledge

பல்வேறு முகாமை அறிஞர்களால் வழங்கப்படுகின்ற வரைவிலக்கணங்களை உற்று நோக்கும் போது பிரதான 3 பொது பண்புகளை காண முடிகின்றது.

01. தொடர்ச்சியாக, இணைக்கப்பட்ட செயன் முறையை கொண்டிருத்தல்
02. நிறுவனமயமான நோக்கங்களை அடைவதில் கவனம் செலுத்தல்
03. நபர்களையும், வளங்களையும் ஒன்றிணைத்தல்

**முகாமைத்துவத்தின் தேவையும் முக்கியத்துவமும்**


- நிறுவனத்தின் நோக்கங்களையும், இலக்குகளையும் வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு
- வரையறுக்கப்பட்ட வளங்களை செயற்றிறனுடனும், வினைத்திறனுடனும் பயன்படுத்தி கொள்வதற்கு
- மாற்றமுறும் வணிகச் சூழலுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு
- போட்டித்தன்மைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதன் ஊடாக வணிகததின் நீண்டகால வாழ்தன்மையை உறுதிப் படுத்துவதற்கு
- பிரச்சனைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கும் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கும்
- நிறுவனம் சமூகப்பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு
- நிறுவனம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினரின் எதிர்பார்க்கைகளை உயர்வான நிலையில் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு

முகாமைத்துவ கருமங்கள்

முகாமைத்தவத்தின் அனைத்து கருமங்களுக்கிடையில் தொடர்பு காணப் படுகின்றது. இவற்றை பிரதான 4 பகுதிகளாக பிரிக்க முடியும்.

1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல்
3. வழிநடத்தல்
4. கட்டுப்படுத்தல்

கீழ்வரும் வரைபடமானது முகாமை கருமங்களுக்கிடையிலான தொடர்கை காட்டுகின்றது.





**முகாமைத்துவமும் நிறுவன வளங்களும்**

நிறுவனத்திடம் காணப்படும் வளங்களின் தன்மை பற்றியும் அவற்றை பயன்படுத்ததும் விதம் பற்றி முகாமையாளர்கள் அறிந்திருத்தல் வேண்டும்

இவ்வளங்களை பிரதானமாக 4 பகுதிகளாக பிரிக்க முடியும்

1. மனித வளம்
2. நிதிவளம்
3. மூலப் பொருட்கள்
4. மூலதன வளம்

உற்பத்தி நடவடிக்கையின போது வளங்களை பயன்படுத்தி மூலப்பொருட்களை உற்பத்திகளாக மாற்றுகின்ற செயன்முறை பின்வரும் வரைபடத்தினூடாக காட்டப்படுகினறது




**முகாமைத்துவ வினைத்திறன்**

முகாமையாளர்கள் நிறுவன வளங்களை வினைத்திறனாகவும், விளை திறனாகவும் பயன்படுத்தவேண்டும் வினைத்திறன் என்பது நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வளங்களை சரியாக பயன்படுத்தல் முகாமைத்துவ வினைதிறன் ஆகும்

**முகாமைத்துவ வினைதிறன்**

நிறுவனத்தின் வளங்களுக்கும் அவற்றின் உற்பத்தி திறனுக்குமிடையிலான விகித சமனான தொடர்பு விளைதிறன் ஆகும். இதனை பின்வருமாறு கணிப்பிட முடியும்

$$\text{உற்பத்தி வினைதிறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

ஆகவே இங்கு வினைத்திறன். விளைதிறன் ஆகிய இரண்டையும் அடைய முற்பட வேண்டும் அப்போதே அவர் சிறந்த முகாமையாளர் ஆவார்

உசாத்துணை : அறிவுத்தேடல் (2013) திரு .ஜகத் பண்டாரநாயக்க
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் -13

கே.நிரோஜி
2014 வர்த்தகப்பிரிவு

# நேர முகாமைத்துவம்

விஞ்ஞானமானது வியத்தகு வகையில் வளர்ச்சியடைந்த உலகிலே நாம் இன்று சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். கடிதங்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிய காலம் கடந்து கணனி வலைப் பின்னல்கள் மூலம் தகவல்களை பரிமாறும் காலம் கனிந்து விட்டது. சுறுசுறுப்பாக சுழன்று கொண்டிருக்கும் உலகிலே வளர்ச்சி அடைந்து வரும் கற்கை நெறிகளில் முகாமைத்துவ கற்கை இன்று உன்னத நிலையில் காணப்படுகின்றது. இதற்கு காரணம் இன்றைய உலகில் ஒவ்வொரு அம்சங்களிலும் முகாமைத்துவம் முக்கிய இடம் வகிக்கிறது. அதே போல முகாமைத்துவ முகாமையாளர் களும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழல் உருவாகி யிருக்கின்றது என்பது மறுப்பதற்கில்லை. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் "நேரத்தை உரிய முறையில் பயன்படுத்தல்" பிரதான இடம் வகிக்கிறது. எனவே இச்சவாலை சமாளித்து உரிய இலக்கை வினைத் திறனுடன் அடைய "நேர முகாமைத்துவம்" தொடர்பான அறிவை கொண்டிருத்தல் அவசியம் ஆகும்.

நேரம் முடிவுற்றதொன்றாகும் ஆனால் நாம் ஒவ்வொருவரும் அதனை முடிவுள்ள தாகப் பங்கிட்டுக் கொள்ள முயல்கி ன்றோம் உலகில் உள்ள திறமை சாலிகள், புத்திசாலிகள், செல்வந்தர்கள், முயற்சியா ளர்கள், அறிவற்றவர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் ஒரு நாளில் 24 மணித்தியாலம் 1440 நிமிடங்கள் 86440 வினாடிகள் அனுபவிக்கலாமே தவிர கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அனுபவிக்க முடியாது. நேரம் என்பது எல்லோருக்கும் சமமாகவே கிடைக் கின்றது. நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக நாம் நேரப்பயன்பாட்டையே முகாமை செய்கின்றோம். இதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் நேரத்தை முகாமை செய்வதற்கு மூன்று அடிப்படை விடயங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் அவையாவன: மக்கள், எங்கள் அவயத் திலுள்ள நேரம், ஆவணங்கள்

1. மக்கள்: எம்முள் பலர் தமது வாழ்நாளில் 33 வீதத்தினை நித்திரையிலும் 33வீதத் தினை தொழில்சார் நடவடிக்கை யிலும் செலவு செய்கின்றனர். நாம் எமது நேரப் பயன்பாட்டில் "பரிட்டோ விதியை" பயன்படுத்துகின்றோம். எமக்கு மிகவும் முக்கியமான செயற்பாடுகளிற்கு 20% த்தையும் ஓரளவு முக்கியமான செயற்பாடுகளிற்கு 80% த்தையும் செலவிடுகின்றோம் உண்மையில் இதற்கு எதிர்மாறாக செயற்பட வேண்டும்

2. எங்கள் அவயத்தில் உள்ள நேரம்: நாம் சிவப்பு நேரத்தையும், பச்சை நேரத்தையும் கொண்டிருக்கின்றோம். எம்மால் வீண்விரயம் செய்யப்படும் நேரம் சிவப்பு நேரம் எனவும் எம்மால் பயனுடையதாக பயன்படுத்தும் நேரம் பச்சை நேரம் எனவும் அழைக்கப்படும். நேர முகாமைத்துவம் என்னும் போது சிவப்பு நேரத்தை பச்சை நேரமாக்கிக் கொள்ளல் வேண்டும்.

3. ஆவணங்கள்: எமது சிந்தனைகளை நாம் எழுத்து வடிவில் உருவாக்க வேண்டும். ஆரம்பத்தில் அவை முக்கியமானதாக காணப்பட்டாலும் நீண்ட காலத்தில் அவை நன்மை பயப்பதாகவே அமையும். அதே போல ஒவ்வொரு நாள் முடிந்ததும் உரிய கோவையில் பதிவு செய்ய வேண்டும் இது தீர்மானம் எடுக்க உதவும் நேரம் வீண்விரயமாவது தடுக்கப்படும்.

உலகில் ஒரு சிறந்த முகாமை சிந்தனையாளர் என புகழ் பெற்ற பீற்றர் றக்கர் (peterdruker) கருத்துப்படி நேரம் மிகவும் அருமையான மூலவளம் அதனை சிறப்பாக முகாமை செய்யாவிடில் வேறு எதனையும் முகாமை செய்ய முடியாது என கூறியிருக்கிறார். நேர முகாமைத்துவத்தை சுருக்கமாக விளக்கினால் "அதிக நேரத்தை முதலீடு செய்வதனையும் குறைந்த நேரத்தை செலவு செய்வதனையும்" குறிக்கும்

எனவே கடும் போட்டி நிலவும் இவ் உலகிலே நாம் உரிய முறையில் நேரத்தை முதலீடு செய்து அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு எமது இலக்கினை பூரணமாக வினைத்திறனுடன் அடைய முடியும் என்பது உறுதி.

"I wasted time now doth time wasted me"- Richard

நான் நேரத்தை விரயமாக்கினேன். இப்போது நேரம் என்னை விரயமாக்கின்றது.

**உசாத்துணை**

**வணிகத்தேடல் (2012) வவுனியா தேசியக் கல்விற் கல்லூரி வெளியீடு.**

தே. துஷாரா
2014 வர்த்தகப்பிரிவு

# Locating a Business

## Introduction

Every organization should focus great attention on selecting a suitable location. But all factors determining the location can't be expected to be in favour of the selection of the location therefore, the availability of the major factors should be taken into consideration in selecting locations.


The term location refers to the process of selecting of suitable place or location There are many factors that Influence choice of location of business they are,

- Distance to markets.
- Availability of labour.
- Safety.
- Transport Costs.
- Availability of land.
- Government incentives.
- Utilities.
- Communications.
- Regional factors.
- Availability of raw materials.

### 1. Distance to market

Many businesses need to be located close to their market i.e. their customers. Think of the florist at a railway station or the local news agent service industries such as entertainment and banking also have to locate near their

markets to be available for their customers Many manufacturing industries locate close to their markets, particularly if there produce bulky or fragile items which are expensive to market. Centres of population tend to attract bulk- increasing industries. These are industries where the output is more expensive to transport than the raw materials. They need to be Close to their market in order to minimize transport costs for example, London is ringed by bulk- increasing consumer goods industries.




**2. Availability of raw materials**

Some businesses use a lot of heavy and bulky raw materials in the construction of their products. However, these products may be a lot smaller and lighter than the ingredients which have gone into them for example finished steel is a lot lighter than the ingrediants which have gone into them. fore example finished steel is a lot lighter than the ore, limestone and other materials which have gone into marketing it. If the raw materials are bulky and expensive to transport, it

makes sense to locate near to them. These industries are knows as bulk-decreasing industries, as their output is much cheaper to transport than their input.

**3.Transport costs**

Different industries have different transport needs two major influences are the pull of the market and of raw materials. These depend on whether the industry is bulk- increasing or bulk-decreasing.However, many industrial markets are spread out and raw materials come from several suppliers.

**4.Availability of land**

Land costs vary a lot form area to area. Some firms dealing with large quantities of goods require a lot of space others may need to check that a site has the right geology to support heavy weights or the right climate for producing certain goods.

**5.Availability of labour**

The right sorts of labour and skils are easierto find in some areas than others. If afirm moves to an areas which dose not have the right sort of labour it will have to pay employees to relocate or train people in the skill it needs this costs money in some areas there may be a tradition of workers in a particular industry and there will be a large pool of works with the right skills already available Footloose industries are ones ones which donot have to be located any where in particular. These industries will be attracted to areas where labour is cheap

**6.Safety**

Some industries have to locate their premises well away from heavily

populated areas for example nuclear power stations munitions factories and some chemical plants.

## 7.Utilities

A business must consider 5 standard utilities.

☒ Gas

☒ Electricity

☒ Water

☒ Disposal of waste

☒ Drainage

Aluminiums smelting for example uses vast quantities of water food - processing creates waste and the cost of disposing of this waste is a key locational factor.

## 8.Communication

Access to motor ways, ports and airports has become an increasingly important locational factor in recent years These services and other vital communication links make up what is called the infrastructure of a region A good infrastructure can attract business to move to an area Many towns have expanded Partly as a result of good communications For example the M4 corridor between London and south wales has been very successful in attracting industry to wales.

## 9.Regional factors

Locating in an area which contains similar businesses suppliers and markets may be a considerable advantage The quality of local school, housing, lesure and recreational facilities can also help to maintain the quality of staff and keep them happy and motivated.

**10.Government incentives.**

Un employment rates vary considerably between regions. The government tries to reduce these differences by rewarding firms which set up in areas of hard ship however such government incentives can make problems worse in neighbouring areas in some cases the new industries created have not been very labour intensive in the 1990 s many local councils tried to attract new firms into their areaqs by advertising in national news papers some firms researched the facilities that new businesses were looking for and then built factory units to meet their needs.

**Refernce:**

www.wikipedia. Com.

ship however such government incentives can make problems worse in neighbouring areas in some cases the new industries created have not been very labour intensive in the 1990 s many local councils tried to attract new firms into their areaqs by advertising in national news papers some firms researched the facilities that new businesses were looking for and then built factory units to meet their needs.

**Refernce:**

www.wikipedia. Com.

S.Subarami
2014 Com


## வணிகம்

விரைந்தோடும் காலத்தில் விரைந்தேறும் வணிகத்தால்
விதைத்திடும் பலவிந்தைகள் - சாட்டியும் சவுக்கந்தோப்பும்
போனகாலம் போய் செவ்வனே செல்வோம்
வணிக வளர்ச்சிக்கு□.!

ஆண்பெண் பேதங்கள் மறையும் - இவ்வுலகில்
வணிக வளரச்சியால் தொழிலாளர்கள்- இல்லாது
தொழில்கள்நிறைவேறும் - முதலாளி
இல்லாது முதலீடு நடக்கும்
ரோபோக்கள் வீதியில் வேலை நிறுத்தம் செய்யும்

கனவிலும் கூட போராட்டம் நடக்கும்- இவ்
வணிக வளர்ச்சி உலகெங்கிலும் - வணிக புதுமையில்
புதைத்திடு புது எண்ணங்களை

சி. அகல்யா
2015 வர்த்தகப்பிரிவு



# இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில்
# Tourist Industry in Sri Lanka

வே.கருணாகரன்
பொருளியல் ஆசிரியர்
யாழ்.இந்துமகளிர் கல்லூரி

## அறிமுகம்

"இந்து சமுத்திரத்தின் முத்து" (Pearl of Indian Ocean) என அழைக்கப்பட்ட இலங்கைத்தீவானது அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்கள் மற்றும் முப்பதாண்டு நீடித்த கொடிய யுத்தம் என்பவற்றால் "இந்து சமுத்திரத்தின் இரத்தம்" ஆக மாறியிருந்தது. யுத்தமுடிவினைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழிலில் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

நீடித்த சமாதானம் நிலவுமாயின், சிகிரியா, அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற உலக மரபுரிமைகள் மட்டுமன்றி; அழகான கரையோரம், இயற்கையின் விந்தைகள் நிறைந்த இயற்கை மழைக்காடுகள். மற்றும் நட்புறவு மிக்க உபசரிப்புக்களைக் கொண்ட மக்கள் சமுதாயத்தைக் கொண்டுள்ள இலங்கையானது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய ஒரு சொர்க்கமாகும்.

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருகின்ற பிரதான மூலம் என்ற வகையில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. இன்று சுற்றுலாக்கைத்தொழிலானது உலகில் மிகப்பாரியதும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றதுமான ஒரு கைத்தொழிலாக விளங்குகின்றது.

எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்குமென எதிர்பார்த்து இலங்கையை ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் இக்கட்டுரையானது,

01. சுற்றுலாப்பயணிகள் வருகையில் அதிகரிப்பு
02. வெளிநாட்டு செலாவாணி வருமானத்தில் அதிகரிப்பு
03. உற்பத்தியில் உயர் வளர்ச்சி
04. தொழில் வாய்ப்புக்களில் அதிகரிப்பு
05. 5+1 : சுற்றுலா மைய உருவாக்கம்
06. எதிர் நோக்கும் சவால்கள்

ஆகிய ஆறு உபதலைப்புக்களின் கீழ் இலங்கையின் சுற்றுலாத்துறை பற்றி ஆராய்கின்றது.

### (01) சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் அதிகரிப்பு

இலங்கையில் சுற்றுலாப்பயணிகளின் வருகையானது மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருவதை பின்வரும் அட்டவணை காட்டி நிற்கின்றது.

**சுற்றுலாப்பயணிகள் வருகை**

| ஆண்டு | வருகைகள் (ஆட்கள்) |
|---|---|
| 1987 | 182,620 |
| 2008 | 438,475 |
| 2009 | 447,890 |
| 2010 | 654,476 |
| 2011 | 855,975 |
| 2012 | 1005,605 |
| 2013 (மதிப்பு) | 11,70,000 |
| 2016 (எதிவு) | 25,00,000 |

இவ் வளர்ச்சிக்கு வழி வகுத்த முக்கிய காரணிகளாவன:

1. யுத்தம் முடிவுக்கு வந்தமை
2. உட்கட்மைப்பு விருத்தி

**நாடுகள் ரீதியில் சுற்றுலாப் பயணிகள் வருகை**

| நாடுகள் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| இந்தியா | 126,882 | 171,374 | 176,340 |
| ஐக்கிய ராச்சியம் | 105,496 | 106,082 | 114,218 |
| ஜேர்மனி | 45,727 | 55,882 | 71,642 |
| பிரான்ஸ் | 35,791 | 44,018 | 47,572 |
| அவுஸ்திரேலியா | 33,456 | 41,728 | 51,614 |
| மாலைதீவு | 31,285 | 48,695 | 56,863 |

பண்டைக்காலம் முதல் தனியொரு நாடு எனப் பார்க்குமிடத்து இந்தியா இலங்கையில் பிரதான சுற்றுலாச் சந்தையாக காணப்படுகின்றது. இரண்டாவது மூன்றாவது நாடுகளாக முறையே ஐக்கிய ராச்சியம் மற்றும் ஜேர்மனி என்பன விளங்குகின்றன.

2013 ஜனவரி - நவம்பர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1016228 இற்கு 15% இனால் அதிகரித்தன. சீனா, ரஷ்யா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்தான சுற்றுலா பயணிகளின் வருகைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. பிராந்தியங்கள் ரீதியில் மேற்கு ஐரோப்பா சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

## (02) வெளிநாட்டுச் செலவாணி வருமானத்தில் அதிகரிப்பு

சுற்றுலாப்பயணிகள் நாள் ஒன்றுக்கு செலவிடுகின்ற பணத்துடன் அவர்கள் இலங்கையில் சராசரியாகக் கழிக்கின்ற காலத்தைக் கவனத்தில் கொண்டு, சுற்றுலாக் கைத்தொழிலின் ஊடாக இலங்கை ஈட்டிக் கொள்ளக்கூடிய வெளிநாட்டுச் செலவாணியை கணிப்பிடக்கூடியதாகவுள்ளது.

| சராசரி ஒரு சுற்றுலாப்பயணி ஒரு நாளில் செலவளித்துள்ள பணம் | |
|---|---|
| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
| 2010இல் | 88 |
| 2011 | 97 |
| 2012 | 103 |

சுற்றுலாப்பயணி ஒருவர் சராசரியாக இலங்கையில் கழிக்கின்ற காலம் 10 நாட்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுச் செலவாணி மூலங்களில் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஆறாவது இடம் கிடைக்கின்றது.

01. வெளிநாடுகளில் தொழில் புரிவோர் பண அனுப்பல்கள்
02. புடைவைகள் மற்றும் ஆடைகள்.
03. தேயிலை
04. போக்குவரத்துச்சேவை
05. இறப்பர் உற்பத்தி
06. சுற்றுலாத்துறை

இனி வரும் காலங்களில் இதன் முக்கியத்துவம் முன்னேற்றம் அடையும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

| சுற்றுலா வருவாய்கள் | |
|---|---|
| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
| 2012 | 1.0 பில்லியன் |
| 2013 (மதிப்பு) | 1.4 பில்லியன் |
| 2016 (எறிவு) | 3.1 பில்லியன் |

### (03) உற்பத்தியில் உயர் வளர்ச்சி

அண்மையாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறை உயர் வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

2011 இல் :- 26.4%
2012 இல் :- 20.2%

### (04) தொழில் வாய்ப்பில் அதிகரிப்பு

சுற்றுலாக்கைத்தொழிலின் பொருளாதார நலன்கள் வெளிநாட்டுச் செலவாணியை ஈட்டுவதில் மட்டுமன்றி தொழில் உருவாக்கத்திலும் பிரதானமானதொரு மூலமாக இதனைக் கருதலாம். ஹோட்டல்கள் துறை சுற்றுலா முகவர் சேவைகள், பொழுதுபோக்கு சம்பந்தமான தொழில்முயற்சிகள், போக்குவரத்து வசதிகளை வழங்குதல் ஆகிய துறைகளின் பொருட்டு சுற்றுலாக்கைத்தொழிலினூடாக நேரடி தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அத்துடன் நேரடியல்லாத தொழில் வாய்ப்புக்களும் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றன.

தொழில் வாய்ப்புக்கள்

| ஆண்டு | நேரடி | மறைமுக |
|---|---|---|
| 2008 | 51,306 | 71,828 |
| 2009 | 52,071 | 72,899 |
| 2010 | 55,023 | 77,032 |
| 2011 | 57,786 | 80,899 |
| 2012 | 67,862 | 95,007 |

சுற்றுலாக் கைத்தொழிலில் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

### (05) 5+1 மைய உபாயம் : சுற்றுலா மைய உருவாக்கம் (Tourism hub)

மகிந்த சிந்தனையின் கீழ் ஆரம்ப கால ஐந்து மையக் கொள்கை உபாயத்தில் ஆறாவது மையமாக சுற்றுலாத்துறை இணைக்கப்பட்டு தற்போது அதற்கு ஊக்குவிப்புக்கள் அதிகளவு வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்காக 2013 இன் இறுதியில் 268 செயற்திட்டங்கள் ஆயத்த நிலையில் இருந்ததுடன், 136 செயற்திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 01. கடல் போக்குவரத்து மையம் | - | Naval / Maritime hub |
| 02. விமானப் போக்குவரத்து மையம் | - | Aviation hub |
| 03. வர்த்தக மையம் | - | Commercial hub |
| 04. சக்தி வள மையம் | - | Energy hub |
| 05. அறிவு மையம் | - | Knowledge hub |
| 06. சுற்றுலா மையம் | - | Tourism hub |

5 + 1

சுற்றுலா மைய உருவாக்கத்தின் கீழ் 2016 இல் அடைய எதிர்பார்க்கப்பட்டுள்ளவை.

- ☞ சுற்றலா வருகைகள் 2.5 மில்லியனுக்கு அதிகரிக்கும்.
- ☞ சுற்றுலா வருவாய்கள் ஐக்கிய அமெரிக்க டொலர் 3.1 பில்லியனுக்கு அதிகரிக்கும்.

வர்த்தக நடவடிக்கைகள், உட்கட்டமைப்பு, நலம் மற்றும் கல்வி வசதிகள் என்பவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் நீண்ட காலம் தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போக்கு அதிகரித்து சுற்றுலாப் பயணிகள் வருமானம் அதிகரிக்கும்.

**06) சவால்கள்**

ஏதிர்வரும் வருடங்களில் இலங்கையின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை 2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்க்கிறது. இத்துறையினை ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதில் இலங்கை பல்வேறு சவால்களை எதிர்நோக்குகிறது.

அவையாவன:-

01. நாட்டில் சுற்றுலாத்துறைக்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டும். இலங்கை மேற்குலக நாடுகளில் தனது தோற்றப்பாட்டினை / பிம்பத்தை (image) விருத்தி செய்ய வேண்டும். ஒரு சுற்றுலாஇடமாக திகழ எதிர்பார்க்கும் ஒரு நாட்டிற்கு அந்நாடு பற்றிய உலகளாவிய அபிப்பிராயம் மிகவும் முக்கியமாகும்.தற்போது உலக அபிப்பிராயம் மிகவும் பாதகமாக உள்ளது.

02. சந்தையினால் இயக்கிச் செல்லப்படும் தெளிவான சுற்றுலா தந்திரோபாயமானது உடனடித் தேவையாக உள்ளது. இத் தந்திரோபாயம் சந்தை விரிவாக்கத்தை ஏற்படுத்துவதாயும் பரந்த அடிப்படையில் பரவலாக்கப்பட்ட வகையில் முக்கிய சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டும் அமைய வேண்டும். தற்போதுள்ள அணுகுமுறையானது நிரம்பலால் வழி நடத்தப்படுவதாக உள்ளதுடன் கேள்விப் பக்க போக்குகளுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்காததாகவும் உள்ளது.

03. தற்போதுள்ள அறைகளின் இயலளவு எதிர்காலத்தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதன்று. கிடைக்கப்பெறும் புள்ளி விபரங்களுக்கு அமைய ஒரு சுற்றுலாப் பயணியின் சராசரி தங்கியிருக்கும் காலம் ஆறு இரவுகளாயின், இரண்டரை மில்லியன்

பயணியின் சராசரி தங்கியிருக்கும் காலம் ஆறு இரவுகளாயின், இரண்டரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய 40,000 அறைகள் தேவைப்படும். முறைசசார்ந்த மற்றும் முறை சாராத்துறைகளை உள்ளடக்கிய அறைகளின் தற்போதைய மொத்த எண்ணிக்கை 22,000 ஆகும். எனவே இன்னும் 18,000 அறைகள் நாட்டிற்கு தேவைப்படுகின்றன.

04. 18,000 அறைகளைக் கட்டுவதற்குக் குறைந்த பட்சம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். இதன் பொருட்டு புதிய முதலீட்டாளர்களை கவர்வது அவசியமாகும்.

05. சாத்தியமான/ பரந்த வகையினரான சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வண்ணம் சுற்றுலா மையங்களை சென்றடையக் கூடிய வகையில் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்ய கணிசமானளவு அரசாங்க முதலீடு அவசியமாகும். அதாவது நெடுஞ்சாலைகள் புகையிரதப்பாதை என்பவற்றை அபிவிருத்தி செய்தல், விமான ஓடுபாதைகளை விருத்தி செய்தல் போன்றன.

06. குறுங்காலத்தில் உயர்தகுதிகளைக் கொண்ட நல்ல வாடிக்கையாளர் சேவைப் பாங்குடைய பயிற்றப்பட்ட மனிதவளத்தை உருவாக்க வேண்டிய உடனடித் தேவை உள்ளது.

07. இலங்கையின் அழகிய கரையோரங்கள், ஆழமற்ற கடல், பெறுமதியான கலாசார மரபுரிமைகள் மற்றும் ஏனைய வளங்களைக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில சுற்றலாவை மேற்கொள்வதற்கான சாதகமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

சுற்றுலாக்கைத்தொழிலுடன் தொடர்புடைய "லோன்லி பிளனட் - Lonely plant"எனும் சஞ்சிகையானது "2013 இல் சுற்றுலாவுக்கான மிகச்சிறந்த இடம் இலங்கை Best Place to Visit in 2013 எனக் குறிப்பிட்டுள்ளது. பிரித்தானிய விமான நிறுவமான British Airways 2013" இல் சுற்றுலாவுக்கான மிகச்சிறந்த சேரிடம் இலங்கை - "Best destination to visit in 2013" என குறிப்பிட்டுள்ளது. இவை இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை பிரதிபலிக்கின்றன. நீடித்த சமாதானமும் சகவாழ்வும் மனிதநேயமும் நாட்டில் தோற்றவிக்கப்படுமாயின் இலங்கை ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாறும்.

## References:-


01. ROAD MAP 2014 -Monetary and financial sector policies for 2014 and beyond - Ajith Niward Cabral (02.01.2014) CBSL. IK

02.Tourism Research and Statistics - Sri Lanka Tourism Development Authority . htm

03.குறிப்பேடு : 2012 நவம்பர் - டிசம்பர், இலங்கை மத்திய வங்கி வெளியீடு. பக். 2-9

04.பொருளியல் நோக்கு: மாசி/பங்குனி 2011, மக்கள் வங்கி வெளியீடு . பக்.03-38

05.கா.பொ.த. உயர்தர பரீட்சை -2013 புள்ளித்திட்டம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம். பக். 34,35

# இலங்கையில் பெண்களும் அபிவிருத்தியும்

## அறிமுகம்

இலங்கை சனத்தொகையில் ஏறத்தாழ 51.5 சதவீதம் பெண்களாவார் அதே போன்று தொழிற்படையில் 29.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களும் பெண்களாவர். பொருளாதார அபிவருத்தியில் இவர்களால் நிறைவேற்றப் படுகின்ற கடமைப் பொறுப்பு மிகப் பெரியதாகும். பல்வேறான நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களுடைய பங்களிப்பானது பல்வேறான சமூக, கலாச்சார, அரசியல் தாக்கங்களின் மீது மட்டுப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆயினும் பொதுவாக நோக்குகின்ற போது முழு உலகிலும் அபிவிருத்தியில் பெண்கள் பெரும் பங்களிப்பைக் காட்டி வருகின்றனர். அதுமட்டு மன்றி ஒருபோதும் இல்லாதவாறு வளர்ச்சியடைந்து, விரிவடைந்து காணப்படுகின்றது. தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதார அபிவிருத்தியில் பெண்களுடைய பங்களிப்பு மிக வேகமாக அதிகரித்து வருவதாகவும் அதே போன்று பெண்கள் புதிதாக சந்தையில் சேர்ந்தார்கள் என்பதோடு, இந்த வளர்ச்சியானது தொழில்களை பெண்கள் மயமாக்கல் என்ற எண்ணக்கரு பிரபல்யம் அடைவதற்குக் காரணமாய் அமைந்தது. அதே போன்று இவ்வாறு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பெண்கள் வலுவடைந்துள்ளமையானது தொழில் முயற்சி மற்றும் ஏனைய பல்வேறு துறைகளில் தொழில்களின் முன்னேற்றத்திற்கு பெண்களால் நிறைவேற்றப்படுகின்ற கடமைப் பொறுப்புக்கள் பற்றிய மதிப்பீடு கற்கை மற்றும் பகுப்பாய்வுக்கு பெண் பொருளியல் என்ற பதம் தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை போன்று உலகில் அநேகமான நாடுகளில் பெண்களால் நிறை வேற்றப்படுகின்ற கடமைப் பொறுப்புக்கள் முழுமையாகவே அளவிடப்படுவது இல்லை முறைசார்ந்த மற்றும் முறைசாரா துறைகளில் குறிப்பிட்டதொரு வரைச்சட்டத்தினுள் நடைபெறுகின்ற செயற்பாடுகளின் கணிப்பீடொன்று நடை பெற்ற போதிலும் அநேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற இலங்கை போன்ற பல்வேறான நாடுகளில் பெண்கள் இந்த வரைச்சட்டத்திற்கு வெளியே நிறை வேற்றுகின்ற கடமைப்பொறுப்பு அநேகமாக இந்த அளவீடுகளினுள் உள்ளடங்கு வதில்லை. ஆயினும் தற்போது இது தொடர்பில் அநேகமானவர்களுடைய கவனம் செலுத்தப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. பொருளாதார அபிவிருத்தியில்

**அறிமுகம்**

இலங்கை சனத்தொகையில் ஏறத்தாழ 51.5 சதவீதம் பெண்களாவார் அதே போன்று தொழிற்படையில் 29.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களும் பெண்களாவர். பொருளாதார அபிவருத்தியில் இவர்களால் நிறைவேற்றப் படுகின்ற கடமைப் பொறுப்பு மிகப் பெரியதாகும். பல்வேறான நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களுடைய பங்களிப்பானது பல்வேறான சமூக, கலாச்சார, அரசியல் தாக்கங்களின் மீது மட்டுப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆயினும் பொதுவாக நோக்குகின்ற போது முழு உலகிலும் அபிவிருத்தியில் பெண்கள் பெரும் பங்களிப்பைக் காட்டி வருகின்றனர். அதுமட்டு மன்றி ஒருபோதும் இல்லாதவாறு வளர்ச்சியடைந்து, விரிவடைந்து காணப்படுகின்றது. தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதார அபிவிருத்தியில் பெண்களுடைய பங்களிப்பு மிக வேகமாக அதிகரித்து வருவதாகவும் அதே போன்று பெண்கள் புதிதாக சந்தையில் சேர்ந்தார்கள் என்பதோடு, இந்த வளர்ச்சியானது தொழில்களை பெண்கள் மயமாக்கல் என்ற எண்ணக்கரு பிரபல்யம் அடைவதற்குக் காரணமாய் அமைந்தது. அதே போன்று இவ்வாறு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பெண்கள் வலுவடைந்துள்ளமையானது தொழில் முயற்சி மற்றும் ஏனைய பல்வேறு துறைகளில் தொழில்களின் முன்னேற்றத்திற்கு பெண்களால் நிறைவேற்றப்படுகின்ற கடமைப் பொறுப்புக்கள் பற்றிய மதிப்பீடு கற்கை மற்றும் பகுப்பாய்வுக்கு பெண் பொருளியல் என்ற பதம் தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை போன்று உலகில் அநேகமான நாடுகளில் பெண்களால் நிறை வேற்றப்படுகின்ற கடமைப் பொறுப்புக்கள் முழுமையாகவே அளவிடப்படுவது இல்லை முறைசார்ந்த மற்றும் முறைசாரா துறைகளில் குறிப்பிட்டதொரு வரைச்சட்டத்தினுள் நடைபெறுகின்ற செயற்பாடுகளின் கணிப்பீடொன்று நடை பெற்ற போதிலும் அநேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற இலங்கை போன்ற பல்வேறான நாடுகளில் பெண்கள் இந்த வரைச்சட்டத்திற்கு வெளியே நிறை வேற்றுகின்ற கடமைப்பொறுப்பு அநேகமாக இந்த அளவீடுகளினுள் உள்ளடங்கு வதில்லை. ஆயினும் தற்போது இது தொடர்பில் அநேகமானவர்களுடைய கவனம் செலுத்தப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. பொருளாதார அபிவிருத்தியில் பெண்களுடைய பங்களிப்பை அதிகரிக்க செய்வதன் மூலம் உற்பத்தி திறனை அதிகரிக்கச் கூடிய திறன் பற்றி கற்கைகள் நடை பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக நோக்குகின்ற போது இலங்கையில் பெண்களை பொறுத்தவரையில் காணக் கூடியதாக உள்ள குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில், அவர்களுடைய வாழ்நாள் எதிர்பார்ப்பு அதிகரித்துச் செல்லலும், கல்வித் துறையில்

அவர்கள் அடைந்துள்ள மற்றும் அடைந்து வருகின்ற முன்னேற்றமும் உயர் தொழில் மற்றும் முகாமைத்துவ மட்டத்திலான தொழில்களில் அவர்களுடைய பிரதி நிதித்துவம் அதிகரித்து செல்லலும் ஆகும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தயில் பெருந்தோட்ட உற்பத்தி ஏற்றுமதி, பதனிடல், கைத்தொழில் அலுவல்கள் மற்றும் ஊழியர் குடியகல்வு தொடர்பில் பெண்களுடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக காணப் படுகின்றது. இவ்வாறான பல்வேறு துறைகளின் ஊடாக பெண்கள் இலங்கை பொருளாதார செயற்பாட்டுடன் தொடர்புபடுகின்ற விதத்தை பற்றி சுருக்கமாக ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு**

பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு பெண்கள் பல்வேறான விதத்தில் தமமுடைய உழைப்பை அர்ப்பணிக்கின்றனர். நேரடியாகவே உற்பத்தி செயற்பாட்டில் தொடர்பு கொள்வதன் மூலமும் அதே போன்று தமது குடும்பத்தினுள் சிறந்த முறையில் பொருளாதார முகாமைத்துவத்தை தாபித்துப் பேணிவருவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமும் எதிர்கால முதலீட்டின் சிறப்பியல்பு வாய்ந்த மூலமொன்றான நோயற்ற ஆரோக்கியமான மற்றும் அறிவு வளர்ச்சியுடன் கூடிய பிள்ளைகள் சந்ததியினரை முன்னிட்டு தமது உழைப்பை அர்ப்பணித்து அபிவிருத்தி செயற் பாட்டில் தொடர்பு கொள்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்களுடைய உழைப்புப் பங்களிப்பு அதிகரிப்பதற்கு இடையே நேரடியானதொரு தொடர்பு காணப்படுகின்றது. இலங்கையில் உள்நாட்டு கமத்தொழிலிலும் அதேபோன்று தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பெருந் தோட்டங்களை தழுவியதாகவும் பெண்களது உழைப்பு பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றது. இவர்கள் கமத்தொழில் தொழிற் பாடுகளில் ஈடுபடுகின்ற அதேவேளை குடும்ப த்தின் அனைத்து செயற்பாடுகளையும் நிறை வேற்றுகின்றனர். நுகர்வின் பொருட்டு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர் சந்தைகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றனர். ஆயினும் உலகின் எந்தவொரு இடத்திலும் இந்த ஒட்டு மொத்த செயற்பாடும் தேசிய உற்பத்தியை அளவிடும் போது கவனத்தில் கொள்ளப் படுவதில்லை.

இலங்கையில் அரசாங்கத்தில் / தனியார் துறையில் சேவையில் ஈடுபடுகின்ற அநேகமான பெண்கள் வீட்டு பணிகளுக்காக அர்ப்பணிக்கின்ற காலத்தை பற்றி பொதுவான திட்டவட்டமான ஒரு கணிப்பீடு நடைபெறாத போதிலும் அண்ணளவாக இக்காலம் சராசரியாக வாரத்திற்கு 35- 40 மணித்தியாலங்களாகும். இலங்கை போன்றே உலகின் அநேக நாடுகளில் பெண்கள், ஆண்கள் இரு தரப்பினர்களும் ஒரே தொழிலில்

ஈடுபடுபவர்களாக இருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு செலுத்தப் படுகின்ற பெயரளவு சம்பளத்திற்கு இடையில் மாற்றத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் நாளாந்த சம்பளம் செலுத்துகின்ற போது இவ்வாறான முரண்பாடுகளைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்முரண்பாடானது பின்வரும் அட்டணை மூலம் விளக்கப்படுகின்றது.

இலங்கையில்முறைசாரா தனியார் துறையில் நாளாந்த சம்பளம் (ஆண்டுச் சராசரி)

| | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| தேயிலைப் பயிர்செய்கை | | | |
| ஆண்கள் | 543 | 617 | 691 |
| பெண்கள் | 391 | 438 | 512 |
| இறப்பர் பயிர் செய்கை | | | |
| ஆண்கள் | 588 | 658 | 741 |
| பெண்கள் | 463 | 490 | 585 |
| நெற் பயிர்ச் செய்கை | | | |
| ஆண்கள் | 658 | 704 | 787 |
| பெண்கள் | 453 | 530 | 599 |

**ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதில் பெண்களின் பங்களிப்பு**

இலங்கையில் 2006ஆம் ஆண்டில் ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களில் தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 410,851 ஆகும் 2002ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 111,053 ஆகும். ஏற்றுமதித் தயாரிப்பு வலயங்களின் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாவர். இலங்கையில் முதலீட்டு அபிவிருத்திச் சபையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் பல காணப்படுகின்றன. புடவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி இந்த ஏற்றுமதித் தயாரிப்பு வலயங்களினுள் பெருமளவில் நடைபெறுகின்றன. இலங்கையில் புடவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி துறையில் தொழிலில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையினராக பெண்களே காணப்படுகிறனர். இவர்களில் 75 சதவீதம் 25 வயது / அதற்கு குறைவான இளம் வயதுடைய பெண்களாவார்.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தினுள் புடைவைகள் மற்றும் ஆடைகளின் பங்களிப்பானது குறிப்பிடத்தக்க தொரு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 50

சதவீதத்திற்கும் அதிகமான தொகை புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியின் மூலமாக ஈட்டித்தரப்பட்டது. இச் சதவீதமானது படிப்படியாகக் குறைந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டளவில் முறையே 39.7 சதவீதமாகவும் 40.8 சதவீதமாகவும் காணப்பட்டது. இதற்கமைய வருடாந்தம் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்படுகின்ற ரூபா 463,509 மில்லியன் அளவிலான வருமானத்தை இலங் கையின் பொருளாதாரத்தினுள் சேர்ப்பதற்கு பெண்கள் பலர் தமது உழைப்பை அர்ப்பணிக்கின்றனர். ஏற்றுமதித் தயாரிப்பு வலயங்களில் சேவையாற்றுகின்ற பெண்களால் ஈட்டப் படுகின்ற வருமானம் அநேகமாக அவர்க ளுடைய குடும்பங்களின் பிரதானமான வருமானம் ஈட்டும் வழியாகக் காணப் படுகின்றது. அவர்களுடைய வருமானத்தில் குறிப்பிடத்தக்க தொரு பகுதி குடும்பத்தின் உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய நடவடிக்கைகளுக்காகவே செலவிடப் படுகின்றது.

### வெளிநாட்டு பண அனுப்பல்கள்

இலங்கையில் தொழில்களுக்காக வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களை ஆராய்கின்ற போது, நாளொன்றுக்கு ஆண், பெண் இருபாலரிலும் 700க்கும் மேற்பட்டவர் வெளிநாட்டு தொழில்களுக்காக வெளியேறிச் செல்கின்றார்கள் என்பதனை காணக்கூடியதாக உள்ளது. 2003 / 2007 வரையிலான ஆண்டு களில் தொழில்களுக்காக வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாவர் 2005ம் ஆண்டுக்கு முன்னர் 60 சதவீதத்தை விட அதிக பெறுமானத்தை கொண்டிருந்தது என்பதை காணக்கூடியதாக உள்ளது.

2009ம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில்களுக்காக புலம் பெயர்ந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் அதாவது 51.7 சதவீதம் பெண்களாவர். 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் இது முறையே 48.8 சதவீதமாகவும், 48.3 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இதில் குறிப்பிடத்தக்கதொரு பண்பாக காணப்படுவது. 2009ம் ஆண்டிற்கு பிறகு வீட்டுப்பணிப் பெண்களாக செல்கின்ற பெண்களுடைய எண்ணிக்கை வீழ்ச்சியடைதலாகும். இதற்குப் பதிலாக உயர்தொழில், நடுத்தர மற்றும் எழுது வினைஞர்கள் போன்ற பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத துறைகளின் கீழ் வெளிநாடு சென்றுள்ள பெண்களுடைய எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காணக் கூடியதாக இருக்கிறது. எவ்வாறாயினும் பெண்கள் திறன் அடிப்ப டையில் தொழில்களுக்காக வெளிநாட்டுக்கு புலம் பெயர்வதை ஆராய்கின்ற போது காணக்கூடியதாகவுள்ள குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில், வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்ற பெண்களின் சதவீதம் ஏனைய அனைத்து

துறைகளையும் தாண்டி நிற்கின்றது என்பதாகும். அதாவது தொழில்களுக்காக வெளிநாடு செல்கின்ற பெண்களில் 85 சதவீதமானவர்கள் வீட்டுப் பணிப் பெண்களாக செயலாற்றுவதற்காக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். அண்மைய ஆண்டுகளில் தொழில்களுக்காக வெளிநாடு செல்கின்ற பெண்களின் சதவீதத்தில் குறைவாக காணக்கூடியதாய் இருந்த போதிலும் அது 50 சதவீத பெறுமானத்தைக் கொண்டுள்ளது.

தொழில்களுக்காக புலம்பெயர்கின்ற நாடுகளைப் பற்றி ஆராய்கின்ற போது 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றார்கள் என்பதைக் காணக்கூடியதாய் உள்ளது. இதன் காரணமாக 2003- 2012 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டுத் தொழில் புரிவதிலிருந்து ஈட்டப்பட்ட பண அனுப்பல் களில் அண்ணளவாக 60சதவீதமானது மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அனுப்பல் செய்யப்பட்டவையாகும். 2012ம் ஆண்டில் மத்திய கிழக்கில் தொழில்புரிவோர்களின் பண அனுப்பல்கள் (ஆண் மற்றும் பெண்) ரூ 428,593 மில்லியனாக காணப்பட்டது. வீட்டுப் பணிபெண்களாக வெளிநாடு செல்கின்ற பெண்களில் பெரும் தொகையானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம் பெயர்கின்றார்கள் என்பதோடு அதன் காரணமாக இப்பண அனுப்பல்களில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் மிக உயர் பெறுமானத்தையும் கொண்டுள்ளது. மேலும் வேறு தொழில்களுக்காக புலம்பெயர்ந்த பெண்களுடைய பண அனுப்பல்களையும் சேர்க்கின்ற போது வெளிநாட்டு செலாவணியை ஈட்டுவதில் இலங்கையின் பொருளாதாரத்தினுள் பெண்கள் பாரியதொரு கடமைப் பொறுப்பை நிறைவேற்றுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

மேலும் தொழில் புரிகின்ற வர்களுடைய பண அனுப்பல்கள் மொத்த ஏற்றுமதியின் சதவீதமாக படிப்படியாக அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. 2003ம் ஆண்டில் 27.5 சதவீதமாகக் காணப்பட்ட மேற்படி சதவீதமானது 2011ம் ஆண்டளவில் 48.7 சதவீதம் வரை அதிகரித் துள்ளது. இலங்கையில் வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் பண அனுப்பல்கள் தேசிய வருமானத்தினுள் மிக முக்கியமானதொரு மூலாதாரமாகக் காணப்படுகின்றது.

**கல்வியின் வளர்ச்சி**

உலகின் அனைத்து நாடுகளைப் போன்று இலங்கையிலும் ஆரம்ப கல்வித் துறையில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைக ளுக்கும் இடையே நீண்ட

காலமாகக் காணப்பட்டு வந்த இடைவெளி மிகவும் வேகமாக குறைந்துள்ளது. இரண்டாம் நிலைக் கல்வியில் கவனம் செலுத்துதல் தொடர்பாக ஆராய்கின்ற போது பெண்பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளைப் போன்று சமமாக இரண்டாம் நிலைக் கல்வியில் கவனம் செலுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் ஆண்பிள்ளைகளுக்கு ஒப்பீட்டளவில் பெண்பிள்ளைகள் பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படுதல் அதிகரித்துச் செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இதற்கமைய 2008/ 2009, 2009/ 2010, மற்றும் 2010/ 2011 கல்வியாண்டுகளில் பெண்பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதியை பெற்ற வீதம் முறையே 57.65, 58.16 மற்றும் 60.02 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ்வாறு பெண்களின் கல்வி மட்டத்தில் ஆன வளர்ச்சியைத் தொடர்ந்து பல்வேறான துறைகளில் தொழில்புரிவோர்களில் பெண்களுடைய பங்களிப்பு அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

தென் ஆசியபிராந்தியத்தில் அதிகூடிய பெண்கள் ஆயுட்கால எதிர்பார்ப்பு இலங்கை யிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, அது 78 வயதாகும். இவ்வாறு பெண்கள் ஆரோக்கியமாக காணப்படுதலும் கல்வியின் ஊடாக அவர்களை வலுப்படுத்தலும் அவர் களின் மீது மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தாது. அது நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காக மேற்கொள்கின்ற பெறுமதியானதொரு முதலீடாகும். பெண்கள் தாம் உழைக்கின்ற வருமானத்தில் பெரும் பங்கினை பிள்ளைகளுடைய கல்விக்காக ஈடுபடுத்து கின்றனர். அவர்களுடைய ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்திற்காக செலவிடுகின்றனர். இது எதிர் காலத்தில் பொருளாதாரத்தில் சிறந்த தொரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைக்கும். இவ்வாறு இன்று இலங்கை பொருளாதாரத்தினுள் பெண்களுடைய பிரதிநிதித்துவம் படிப்படியாக அதிகரித்துச் சென்று கொண்டிருக்கிறது. இலங்கை பொருளாதார வளரச்சியின் பொருட்டு பெண்கள் பலம் பொருந்தியதொரு வளமாகும். என்பதோடு, அந்த வளத்திலிருந்து உரிய பயனைப் பெறாது விரயமாக்கப்படுதல் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும்.


சுருக்கமாக...

இலங்கை பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு பெண்கள் பங்களிப்பு முன் எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகின்றது பெண்கள் சுகாதாரம் மற்றும் கல்வித்துறையில் உருவாகியுள்ள முன்னேற்றத்தின் மூலம் அதற்கு சிறந்ததொரு பின்

புலம் வழங்கப்படுகின்றது. அதனூடாக இலங்கை பொருளா தாரத்தினுள் பல்வேறு துறைகளின் ஊடாக பெண்கள் அபிவிருத்தயில் பங்கெடுத்து வருகின்றனர். எனினும் இப்பங்களிப்பை வரையறுக்கின்ற பல தடைகளும் காணப் படுகின்றன. ஆவற்றின் அளவுகள் நம் நாட்டின் சமூக, கலாசார மற்றும் அரசியல் நிர்ப்பந்தங்களின் மீது தீரமானிக்கப் படுவதோடு, அதன் மூலம் உற்பத்தி செயற்பாட்டில் தொடர்புபடுத்தப் படாதிருந்து பெருமளவு உழைப்பு தொடர்ந்து விரயமாகி வருகின்றது. இந்த உழைப்பை உற்பத்தி செயற்பாட்டினுள் ஈர்ப்பதன் மூலம் தொழில் சந்தையினுள் பெண் ஊழியர்களுக்கு காணப்படுகின்ற சம்பள முரண்பாடு, கடன் மற்றும் ஏனைய சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தடைகளை தவிர்த்துக் கொள்ளல் இலங்கை பொருளா தாரத்தின் அபிவிருத்திக்கு மிகவும் சாதக மானதாக அமையும்.

உசாத்துணை: மத்திய வங்கி குறிப்பேடு (2013 மார்ச்– ஏப்ரல்)
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2012

ஆ.டிலோஜினி
2014 வர்த்தகப்பிரிவு



# இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள்

**இலங்கை மத்திய வங்கி**

இலங்கை மத்திய வங்கியானது 1949 ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் மூலம் நாணய ஆணையாளர் சபையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலாதாரத் துடன் நிறுவப்பட்டு 1950 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் நாளன்று தொழிற்படத் தொடங் கியது இலங்கையின் நிதியில் முறைமையில் மத்திய வங்கி உச்ச நிறுவனமாக இருப்பதுடன் இலங்கை ரூபாவின் பெறுமதி மற்றும் நாட்டின் வங்கித் தொழில் கொடுப்பனவு முறை ஆகிய இரண்டினையும் பாதுகாப்பதற்கான பொறுப் பாண்மையினைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.

**அதன் வங்கி குறிக்கோள்கள்**

மாற்றமடைந்து வருகின்ற பொருளாதார சூழலுக்கு இசைந்து கொள்ளும் விதத்தில் மத்திய வங்கியின் நோக்கும் தொழிற்பாடுகளும் உருவாக்கப்பட்டன நோக்கம் விரிவடைகிறது மத்திய வங்கி தொழிலில் காணப்படும் போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களைத் தொடர்வதனை இயலச் செய்யும் விதத்திலும் ஆரம்பத்தில் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பல்வேறு குறிக்கோள்கள்களிலிருந்தும் அதனை விடுவித்துக் கொள்வதனை இயலச் செய்வதற்குமாக 2002ல் நாணய விதிச் சட்டம் திருத்தப் பட்டதன் மூலம் மத்திய வங்கியின் மூன்று குறிக் கோள்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்கள் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி இரு குறிக்கோள்களை கொண்டுள்ளது.

- பொருளாதார மற்றும் விலை உறுதிப் பாட்டினை பேணுதல்
- நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை பேணுதல்

சட்டம் திருத்தப் பெற்றதற்கு முன்னர் மத்திய வங்கி பல்வேறு குறிக்கோள்களை கொன்டுள்ளது அவையாவன.

உள்நாட்டு நாணய பெறுமதிகளை சமநிலைப்படுத்தல் செலவாணி வீத உறுதிப் பாட்டினை பேணுதல் உயர்ந்த மட்ட உற்பத்திகள், தொழில் வாய்ப்பு மற்றும் உண்மை வருமானத்தினை மேம்படுத்தல் மற்றும் உற்பத்தியாக்க மூல வளங்களில் முழுமையாக

அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தலும் போன்றவையாகும் இப்பல்வேறு குறிக் கோள்களும் சில சமயங்களில் முரண் பாடுகளை கொண்டவையாகவும் ஒன்றுடன் மற்றொன்று இணங்கி செல்வதாகவும் காணப்பட்டமை ஒருபிரச்சனையாக இருந்தது இதே நேரத்தில் மத்திய வங்கியின் பிரதான இலக்கு விலை உறுதிப்பாட்டினை பேணு வாதாக இருக்க வேண்டும் என்ற உடன்பாடொன்று பலநாட்டு நியதியாக உருவாக்கப் பட்டது. விலை உறதிப்பாடு உறுதியான பேரண்ட பொருளாதார நிலைமையின் மீது முக்கியமாக தங்கியுள்ளமையினால் மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை "பொரு ளாதாரமும் விலை உறுதிப்பாடும்" என குறித்துவைக்கப்பட்டுள்ளது

மேலும் மற்றய நாடுகளின் அனுபவங்களை நிருபித்து காட்டுகின்றவாறு பொருளாதார நெருக்கடிகளை தடுப்பதற்கு நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மிக இன்றியமையாததாகும் எனவே நிதியியல் முறைமையின் உறுதிப்பாடும் மத்திய வங்கியின் மைக்குறிக்கோளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் இரு குறிக் கோள்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவும் ஒன்றுடன் மற்றொன்று பிரதியீடாகவும் காணப்படுகின்றது. விலை உறுதிப் பாட்டினை எய்துவதற்கு நிதியயில் இடைநிலை நிறுவனங்களினூடாக நாணயக் கொள்கை மேற்கொள்ளப்படுவதனால் நிதியில் முறைமை உறுதிப்பாட்டினை நிலை நிறுத்துவது முக்கியமானதாகும் எனவே இவ் இரு குறிக் கோள்களும் இணக்கப்பாடு உடையதாக இருப்பதுடன் இது மத்திய வங்கி அதன் முக்கிய தொழிற்பாடுகளை மிக காத்திரமான முறையில் செயற்படுத்துவதையும் செய்கிறது மத்திய வங்கி அதன் குறிக்கோள்களை அடையும் நோக்கமாக அதற்கு தன் செயற்ப்பாட்டினை தீர்மானிக்கும் உயர்ந்த அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. இப் பணியில் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதில் நிதியமைச்சுடன் நெருங்கிய தொடர்பினை கொண்டு இருப்பதுடன் மத்திய வங்கியின் அதிகாரம் உள்ள சபையாக விளங்கும் நாணய சபையின் உறுப்பினர்களின் ஒருவராக நிதியமைச்சின் செயளாலர் இருக்கின்றார். நாணய கொள்கை தொடர்பாக நிதியமைச்சருக்கும் நாணய சபைக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருக்குமாயின் நிதியமைச்சர்அரசாங்கத்தின் கருத்துக்கு இணங்க நாணயசபை கொள்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பது மத்திய நாணய சபைக்கு அறிவிப்பதுடன் அரசாங்கதின் கொள்கையை கடைப் பிடிக்குமாறு நாணய சபையினை பணிப்பார்.

**விலை உறுதிப்பாடு**

உள்நாட்டிலும் மற்றைய நாணயங்களின் அடிப்படையிலும் அதனை கொள்வனவு செய்யமுடியும் என்ற அடிப்படையிலும் விலை உறுதிப்பாடு ஆனது

நாணயத்தின் பெறுமதியினை பாதுகாக்கின்றது விலை உறுதிப்பாடு ஆனது மத்திய வங்கியின் இரு குறிக்கோள்களின் ஒன்றாகும் விலை உறுதிப்பாடு அல்லது உறுதியான விலை என்பது குறைந்த பண வீக்கத்தை குறிக்கும். அதாவது பண வீக்கங்களை கட்டுப்படுத்தி பொது விலை மட்டத்தினை உறுதியாக வைத்திருக்க கூடிய குறிக்கோளே விலை உயர்ந்த குறிக்கோளாகும் பண வீக்கம் குறைவாக இருக்கும் வேளையிலும் குறைவாக இருக்கம் என எதிர்பார்க்கப்படும் போதும் பொருளாதாரம் நன்கு செயற்படும் என்பதினை அனுபவங்கள் காட்டுகின்றன இத்தகைய நிலமைகளில் வட்டி வீதமும் குறைவாக இருக்கும் அத்தகைய சூழ்நிலையானது பொருளாதார அதன் வளர்ச்சி வாய்ப்புகளையும் எய்துவதற்கும் உயர்ந்த தொழில் வாய்ப்பினை பேணுவதற்கும் வசதியளிக்கின்றது உயர்ந்ததும் மாறுகின்றதுமான பணவீக்கத்தின் பாதிப்புக்கள் இல்லாது விடத்து நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் தன்நம்பிக்கையு டன் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வார். தாழ்ந்த பண வீக்கம் அல்லது விலை உறுதிப்பாடு வலுவான நீண்ட கால பொருளாதார வளர்ச்சியினையும் தொழில் வாய்பினையும் பேணி வளர்க்கும் மத்திய வங்கி பண வீக்கத்தினை கட்டுப் படுத்துவதற்கு நாணய கொள்கையினை பயன்படுத்துகின்றது.

**நிதியில் முறைமைகளின் உறுதிப்பாடு**

மத்திய வங்கியின் குறிக்கோள்களில் இரண்டாவது குறிக்கோள்களாக இது காணப்படுகின்றது உறுதியான தொரு நிதியியல் முறையானது வைப்பாளர்களுக்கும் முதலீட்டாளார்களுக்கும் சாதகமான ஒரு சூழலை உருவாக்கி வினைத்திறன் மிக்க நிதியியல் இடை நிலை தன்மையினையும் சந்தைகளில் காத்திரமான தொழிற் பாட்டினையும் ஊக்குவிப்பதுடன் முதலீட்டினையும் பொருளாதார வளர்ச்சியினையும் மேம்படுத்துகின்றது. நிதியில் முறைமையின் உறுதிப்பாடு என்பது நாணய சந்தைகளை ஒருங்கமைத்தல் வணிக வங்கிகள் உரிமம் பெற்ற வங்கிகள் போன்றவற்றின் மூலம் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன வாகும். சந்தைகள் மற்றும் நிதியயில் நிறுவனங்களை கண்காணித்தல் கொடுப்பனவு முறைகளை மேற்பார்வையிடல் மற்றும் நெருக்கடிகளை தீர்வு காணுதலின் ஊடாக முழு நிதியியல் முறைமைக்குமான அச்சுறுத்தல்களை தடுப்பது கண்டறிவதும் குறைப்பதும் நிதியில் உறுதிப்பாட்டினை பேணுவதற்கும் தவிர்க்க முடியாதாக உள்ளது இவ்வாறு மத்திய வங்கியானது தனது இருகுறிக்கோள்களையும் நிறை வேற்றி வருகின்றது.

உசாத்துணை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2012

கு.கிருஸ்ணப்பிரியா
2014 வர்த்தகப்பிரிவு

# இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் விதத்தில் மத்திய வங்கி நாணயக் கொள்கையினை மெற்கொண்டு வருகின்றது. நுாணயக் கொள்கை முக்கியமாக பணத்தின் செலவு மற்றும் கிடைப்பனவு என்பன மீது செல் வாக்கினை செலுத்துவதன மூலம் முககிய மானதாக தொழிற்படுகின்றது. இது வட்டி வீதம் மற்றும் கொடுகடன் கிடைப்னவு, பொறிமுறை என்பவற்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

மத்திய வங்கி, அதன் சொந்த கொள்ளை வட்டி விதங்களை வர்த்தக வங்கிகளுடான அதன் நடவடிக்கை மூலம் நிர்ணயக்கின்றது. இவ்வீதங்களை வர்த்க வங்கிகளுடான அதன் நடவடிக்கைகள் மூலம் நிர்ணயிக்கின்றது. இவ்வீதங்கள் கடன் பட்டடோர் மற்றும் சேமிப்போருக்கான வர்த்தக வங்கிகளினாலும் மற்றை நிதியியல் நிறுவனங்களினாலும் நிர்ணயிக்கப்படுகின்ற வட்டி விதங்களின் முழு அமைப்பி னையும் பாதிக்கின்றது. இதுன் விளைவாக இவை பொருளாதாரத்தில் செலவிடல், முதலீடு மற்றும் வெளியுடு என்பவற்றையும் இறுதியாக உற்பத்திச் செலவினையும் பொருள்கள் மற்றும் பணிகளின் விலைகள் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மத்திய வங்கியினால் பயன் படுத்தப்படுகின்ற முக்கியமான நாணயக் கொள்ளைக் கருவியாக மீள் கொள்வளவு விதம் (கடன்படும் விதம்) நேர்மாற்று மீள் கொள்வனவு விதம் (கடன் வழங்கல் விதம்) எனவம் அழ்க்கப்படுனிறன ஒரளவு வட்டி வீதம விளங்குகின்றது. உதாரணமாக மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களில் ஏற்படுகின்ற மாற்றம் பெரம்பாலும் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தையிலுள்ள வட்டி வீதங்களில் மீது ( வர்த்தக வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை) காத்திரமான தாக்கத்தை உனடியாக ஏற்படுத்தும். அழைப்பு வீதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மிகக் குறகிய காலப்பகுதிக்குள் திறைசேரி உண்டியல்கள் மிதான விளைவு, வர்த்தக வங்கிகள் அவற்றின் முதன்மை வாடிக்கையாளர்களுக்கான கடன் வழங்கல் வீதங்கள் போன்ற மற்றைய நெகிழ்ச்சித்தன்மை கொண்ட குறுங்கால வீதங்களின் மாற்றங்களுக்கும் வழிவகுக்கிறது. இம்மாற்றங்கள் ஒருகால இடைவெளிக்குள் வர்த்தக வங்கிகளின் பொதவான கடன் வழங்கல் விதங்களிலும் நடுத்தர கால அரச பிணையங்களின் (திறைசேரி முறிகள்) மீதான விளைவுகளிலும் வங்கிகளால் வழங்கப்பட்ட வைப்பு வீதங்களிலும் தாக்ககளை ஏற்படுத்தும்,

அடுத்தகட்ட நிகழ்வாக, சந்தை வட்டி விதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிறுவனங்களின் (முதலீடுகளுக்கான) மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான (நுகர்வு செலவினத்திற்கான) கொடுகடனுக்கான கேள்வியின் மீது செல்வாக்கைக் செலுத்துமாகையால் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் கொடுகடன் மட்டங்களின் மீது தாக்கம் இருக்கும். இச்செயலமுறையின் இறுதிகட்டமாக வட்டி வீததங்களிலும் விலைகளட மற்றும் வெளியடகள் மீதான கொடுப்னவுகளிலும் ஏறடபடும் மாற்றங்களின் தாக்கம் விளங்கும்.

எதிர்கால பண விக்கம் தற்போது நிலவுகின்ற மட்டங்களிலும் பார்க்க உயர்வாக இருக்குமென எதிர்பார்க்படுமாயின் மத்திய வங்கி பணவீக்கத்தினை குறைப்பதற்காக வட்டி வீதத்தினை (மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு விதம்) உயர்த்தும். முறு தலையாக எதிர்கால பணவீக்கம் தற்பொதைய மட்டத்திலும் பார்க்க குறைவாக இருக்குமென எதிர்பார்க்கபடுமாயின் பொருளாதாரத்தினை துண்டு வதற்கான மத்திய வங்கி வட்டி வீதங்களைக் மீள்கொள்வனவு மற்றும் நேர்தாற்று மீள் கொள்வனவு குறைக்கும் நாணயக் கொள்கையானது பண வீக்கத்தில் மீது கிட்ட தட்ட இரு ஆண்டு காலப்பகுதிக்குள் பெரும் தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என மதிப்பிடப்படுகின்றது.

பொதுவாக கூறுகையில் பொரளா தாரத்தில் காணப்படும் கேள்வி பொருளா தாரத்தின் உற்பத்தியாக்க இயலளவுடன் சமமாக இருப்பதனை உறுதிப்படுத்துகின்ற ஒரு மட்டத்தில் மத்திய வங்கி வட்டி வீதங்களை ( மீள் கொள்வளவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வளவு வீதம்) நிர்ணயிக்கும் வட்டி வீதங்கள் ஆகக்குறைவாகக் நிர்ணயிக்கப் படுமாயின் கேள்வி நிரம்பலை விஞ்சிய பணவீக்கம் அழுத்தம் தோன்றுவதற்கு வழி வகுக்க கூடும் இதன் மூலம் பணவீக்கம் விரிவடையலாம். வுட்டி வீதங்கள் மின உயர்வாக நிர்ணயிக்கப்படுமாயின் வெளியுடுகள் தேவையற்ற வீதத்தில் மிக்குறைவாக அமைவதுடன் பணவீக்கமும் குறைடையக் கூடும்.

**நாணயக் கொள்ளை கருவிகள்**

நாணயக் கொள்ளையினை மேற் கொள்வதற்கு மத்திய வங்கி பரந்தளவிலான கருவிகளை பயன்படுத்தி வருகின்றது.

நுாணயக் கொள்கையின் முக்கிய கருவிகள் பின்வருமாறு

**01. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**

இது தொழிற்பாடுகள் வங்கித் தொழில் முறைமையில் திரவத் தன்மையினை ஏற்படுத்துவதற்காக அரசு பிணைய்ங்களின் (திறைசேரி உண்டியல்கள் / முறிகள்)

அல்லது மத்திய வங்கிப் பிணையங்களின் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் விபனை அல்லது திருதம்பச் வெலுத்துதலுடன் தொடர்புபட்டதாக இருக்கும். முத்'திய வங்கி நிர்ணயிக்கினற வட்டி வீதங்களுக்கிடையில் அதாவது மீள் கொள்வளவு வீதம் / கடன்படுகின்ற வீதம் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களுக்கு இடையில் இக் கொடுக்கவ் வாங்கல் இடம் பெறுகின்றன.

**02. வர்த்தக வங்கி வைப்புக்களின் மீதான சட்ட ரீதியான ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

வைப்புக்களின் விகதங்மாகவுள்ள இதனை மத்திய வங்கிகியுடன் காசு வைப்பாதாக பேணுமாறு வர்த்தக வங்கிகள் பேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**03. வங்கி வீதம்**

திரவப் பிரச்சனைகளைக் கொண்டு ள்ள வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி பணத்தினைக் கடனாக வழங்கும் வட்டிவீதம் இதுவாகும். வுங்கி வீதமானது நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தினை விட உயர்வானதாக இருப்பதடன் இது திரண்ட வட்டி வீதமாகும்.

**04. வெளிநாட்டுச் செலவணித் தொழிற்பாடுகள்**

**05. கோடுகடன் மீதான அளவுசார் கட்டுபாடுகள்**

**06. வட்டி வீதம் மீதான உச்ச எல்லை**

**07. மீள் நிதியியல் வசதிகள்**

**08. ஒழுக்க இணக்குவிப்பு**

தற்போது நாணயக் கொள்கையானது சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்ளைக் கருவிகளின் மீது பெருமளவிற்கு தங்கி இருக்கின்றது. இதுன் விளைவாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் சட்ட ரீதியான ஒதுக்குத் தேவைப்பாடுகளும் முக்கியமான கொள்ளை கருவிகளாக மத்திய வங்கியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்மைய நாடுகளில், மத்திய வங்கி அளவுசார் கொடுகடன் கட்டுபாடுகள், வட்டி உச்ச எல்லைகள் மற்றும் மீள் நிதியியல் வசதிகள் போன்ற கொள்ளை கருவிகளைப் பயன்படுத்;துவதனை நிறுத்திக் கொண்ள்ளது. மேலும் 2001ல் கொள்கையின் கருவி யொன்றான செலவாணி விதத்தினை பயன் படுத்த முடியாமல் உள்ளது.

*ஊசாத்துணை: மத்திய வங்கி ஆண்டறிக்கை 2012*

சாருகா மனோகரன்
2014 வர்த்தப்பிரிவு

# ஒதுக்குச் சொத்தாக தங்கம்

**அறிமுகம்**

தங்கம் உலகில் காணப்படும் மிகவும் பெறுமதி வாய்ந்த உலோகங்களில் ஒன்றாக விளங்குவதுடன் வரலாறு பதிவு செய்யப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் இருந்தே நாணயங்கள் மற்றும் ஆபரணங்கள் தயாரிக்கப்படுகின்ற போது மிகவும் பெறுமதியானதொரு உலோகமாக இருந்து வருகின்றது. கடந்த நூற்றாண்டிலிருந்து நாணயக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான மிகவும் பொதுவானதொரு அடிப்படையாக தங்க நியமம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தீவிரமடைந்து வருகின்ற உலக பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இடர்நேர்வு குறைந்த ஒரு சொத்து பண வீக்கத்தின் தாக்கத்தை தவிர்ப்பதற்கு பயன் படுத்தக்கூடிய ஒரு கருவி, ஒரு முதலீடு மற்றும் அதிக பெறுமதியைக் கொண்ட பிணையத்துக்கான மூலம் என்றவாறு அதன் பெறுமதி நிரணயிக்கப்பட்டுள்ளமையின் காரணத்தி னால் தங்கத்தின் விலை முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்தது.

2007ம் ஆண்டில் நிதியியல் சந்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து தொழில் முயற்சிகள் மற்றும் முதலீட்டாளர்கள் வெளிநாட்டுச் செலவாணி பங்குகள் மற்றும் ஆதனச் சந்தைகள் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். குறைந்த இடர் நேர்வைக்கொண்ட ஒரு சொத்து என்ற வகையில் தங்கத்திற்கான கேள்வி துரிதமாக அதிகரித்தலானது ஐரோப்பிய வலயத்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் உருவாக்கிய படுகடன் நெருக்கடியின் தாக்கத்தின் பெறுபேறாகவே இருந்தது. பணவீக்க அமுத்தம் மற்றும் பன்னாட்டு மத்திய வங்கிகள் தங்க முதலீட்டை அதிகரித்தமை தங்கம் தொடர்பிலான கேள்வியை அதிகரிக்கச் செய்தது.

**மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கம் வகிக்கும் பங்கு**

உலக தங்கச் சங்கத்தின்படி ஒரு வர்த்தக பண்டமாக காணப்படுகின்ற போது கூட மத்திய வங்கிகளால் பேணி வரப்படுகின்ற மூன்றாவது பாரிய ஒதுக்குச் சொத்தாக தங்கம் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் யூரோக்களின் மூலம் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மட்டுமே அதனைத் தாண்டிச் செல்கின்றது. நிதியியல் முறைமையில் சிக்கல்கள் காணப்படுகின்ற போது கூட இயலுமான உச்ச மட்டத்தில் ஒரு நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளின் பெறுமதியை நிலையானதாக

பேணி வருதல் இதற்கு பிரதான காரணமாகும். குறைந்த இடநேரவு, உயர் திரவத் தன்மை மற்றும் சாதகமான பிரதிபலன்கள் போன்ற ஒதுக்கு முகாமைத்துவத்தின் பிரதானமான குறிக்கோள்களையும் தங்கம் நிறைவு செய்கின்றது. இதன் பொருட்டு பின்வரும் விடயங்கள் காரணமாக அமைகின்றன.

- உயர்மட்டத்திலான முதலீட்டுத் தரமிடப்பட்ட நிறுவனங்களில் பேணி வரப்படுகின்ற வைப்புக்கள், உயர்தரத்தைக் கொண்ட இறைமைக்கடன்கள் மற்றும் முறிகள் அதேபோன்று சிறப்பு எடுப்பனவு உரிமைகள் போன்ற பிரதானமான சொத்து வகைகள் சிலவற்றில் மாத்திரம் முதலீடு செய்வதற்கு மத்திய வங்கிகள் தமது முதலீட்டு வழிகாட்டல்களின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடன் இடர்நேர்விலிருந்து அல்லது கொடுக்கல் வாங்கல் தரப்பினரின் இடர்நேர்விலிருந்து விடுபட்டிருப்பதன் காரணத்தினால் உலகி லுள்ள அனைத்து மத்திய வங்கிகளின் பொருட்டு உயர்ந்தளவு தகுதி வாய்ந்த ஒதுக்குச் சொத்தாக தங்கம் காணப்படுகின்றது.
- பண்டைய காலத்திலிருந்து தங்கத்துக்கு பணவீக்கத்துடன் தெளிவான தொடர்பு காணப்படுகின்றது. இதன் காரணமாக தங்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் உயர்பணவீக்க நிலைமையினுள் கூட தமது முதலீட்டுத் தொகுதிகள் முகங் கொடுக்கின்ற பணவீக்க இடர்நேர்வைக் குறைத்துக் கொள்ள, மத்திய வங்கியினால் முடியுமாயுள்ளது.
- உலகப் பொருளாதார நெருக்கடி நிலைமையின் முனனே ஏனைய சந்தைகளில் திரவத்தன்மைப் பிரச்சினை காணப்பட்ட போது கூட தங்கச் சந்தையினுள் சிறந்த திரவத்தன்மை காணப்பட்டது. நிதிச் சொத்துக்கள் போலன்றி தங்கத்திற்கான கேள்வி மூலமானது முதலீட்டு நோக்கத்தின் மீது மாத்திரம் தங்கியிருக்காது மேலும் வாடிக்கையாளர்கள் ஒரு சிலரது பங்களிப்பின் மூலம் மாத்திரம்சந்தை நிலைமையை மாற்றுவதற்கு இயலாதவாறு தங்க நிரம்பல் பல்வகைப் பட்டதாக காணப்படுகின்றது
- வரலாறு பூராகவும், நிதியியல் சந்தைக் குழப்பநிலைக் காலங்களில் பாதுகாப்பான முதலீடாக தங்கத்திற்கான கேள்வி காணப்படும். தங்கத்திற்கு கடன் இடர்நேர்வு காணப்படாமை மற்றம் நிதி நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொருட்டு அநேகமாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்ளைகளை நடைமுறைப்படுத்துகின்ற போது அதன் பெறுமதியை பெறுமதியிறக்கம் செய்ய முடியாதுள்ளமை இதற்குக் காரணமாகும்
- மேலைத்தேய உலகத்தில் பொருளாதார நெருக்கடிகள் பரவியமையின் காரணமாக 1988ம் ஆண்டின் பின்னர் முதற் தடவையாக 2010 ஆம் ஆண்டில் உலகின் அபிவிருத்தியடைந்த அதேபோன்று முன்னேற்றம் கண்டு வருகின்ற பொருளாதார ங்களுக்குரிய மத்திய வங்கிகள் தங்கத்தை கொள்வனவு செய்கின்ற தேறிய கொள்வன

வாளர்களாக் காணப்பட்டனர்

**தங்க ஒதுக்கத்தைக் கொண்டுள்ள பிரதானமான நாடுகள்**

2011ஆம் ஆண்டின் இறுதியளவில் ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுச் சொத்துக்களில் 76.6% தங்கத்தில் காணப்பட்டது. இது உலகில் ஒரு நாட்டிற்குச் சொந்தமான தங்கஒதுக்கத்தின் மிக அதிக தொகையாகும். ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளும் தமது வெளிநாட்டு ஒதுக்குகளில் 60%ற்கும் அதிகளவினை தங்கத்தில் வைத்திருக்கினறன.

ஆசிய பிராந்திய நாடுகளைப் பொறுத்தவரை சீனா அதன் தங்க ஒதுக்குத் தொகையை 600 தொன்களிலிருந்து 1054தொன்கள் வரை அதிகரித்தததன் மூலம் தங்க ஒதுக்குத் தொகையை அதிகரிப்பதில் முன்னிலையில் நிற்கின்றது. கடந்த சில ஆண்டுகளினுள் தங்க ஒதுக்குத் தொகையை அதிகரித்த ஏனைய வளர்ச்சியடைந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களில் தாய்லாந்து, இலங்கை, கொரியா மற்றும் இந்தியா உள்ளடங்குகின்றது.

**இலங்கையில் தங்க ஒதுக்குகள்**

1990 இன் ஆரம்ப காலத்தில் இலங்கை மத்திய வங்கி தங்கத்திலான வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. இலங்கை மத்திய வங்கி தனது வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவ நோக்கங்களை சிறந்த முறையில் பேணிவருகின்ற எதிரபார்ப்புடன் பன்னாட்டுச் சந்தையில் தங்கத்தைக் கொள்வனவு செய்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தங்க ஒதுக்குத் தொகையை படிப்படியாக அதிகரிக்கச் செய்தது.

1990ம் தசாப்தத்தில் தங்க இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு முன்னர், உள்நாட்டு வாடிக்கை யாளர்களுக்கு மீள் விற்பனை செய்கின்ற நோக்கத்தில் இலங்கை மத்திய வங்கி தங்கப் பொருட்களை (தங்கப்பாளங்கள் மற்றும் தங்க நாணயங்கள்) இறக்குமதி செய்தது. 1996 இல் இத்தொழிற்பாடு வர்த்த வங்கிகளுக்கு ஒப்படைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதித்திலிருந்து 10 தொன் தங்கத்தைக் கொள்வனவு செய்தமை அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரதானமான தங்கக் கொள்வனவாகும். இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டு ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்களவு தொகை தங்கத்தில் தொடர்ந்தும் பேணி வருகின்றது


உசாத்துணை

- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2012
- குறிப்பேடு இலங்கை மத்திய வங்கி - 2012 மே-யூன்



அ.அருண்யா
10A

## இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புகளில் ஒன்றான போலி நாணயச் சுற்றோட்டத்தை தடுத்தல்

**நாணயத்தின் உண்மை விபரம்**

நாணயம் என குறிப்பிடப்படுகின்ற நாணயத் தாள்களும் நாணயக் குற்றிகளும் கொடுப்பனவு சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. பண்டமாற்று முறையிலிருந்து ஆரம்பித்த கொடுக்கல் வாங்கல் முறையானது படிப்படியாக வளர்ச்சியடைந்து. தாம் பயன்படுத்துகின்ற பொருட்களைப் பரிமாற்றம் செய்தற்கான ஒரு பெறுமதியுள்ள பொருளைப் பயன்படுத்துதல் இதன் முதலாவது கட்டமாக இருந்தது. இதன் பொருட்டு பண்டைய காலத்தில் கற்துண்டுகள் சிப்பி, ஓடுகள் மற்றும் விலங்குளின் தோல் ஆகியன பயன்படுத்தப்பட்டன. பின்னர் பல்வேறு உலோகத் துண்டுகள் பணமாகப் பயன்பட்டதோடு இவை படிப்படியாக விருத்தியடைந்து இவ் உலோகஙங்களிலிருந்து பல்வேறு வடிவங்களைக் கொண்ட நாணயக் குற்றிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

காலம் செல்ல செல்ல உலகின் கொடுக்கல் வாங்கல் முறைகள் விரிவடைந்தமையால் குறைந்த செலவில் கடதாசியில் அச்சிடப்படுகின்ற நாணயத் தாள்கள் உருவாகுவதற்கு வழிவகுத்தது. 1785 ஆம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி இலங்கையிலும் முதற் தடவையாக ஒரு நாணயத் தாள் வெளியிடப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் ரூபா, சதம் முறை 1872ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதியிலிருந்தே பயன்பாட்டுக்கு வந்ததுடன் ஒரு ரூபா 100 சதங்களுக்கு பெறுமதியிடப் பட்டது. 1884ம் ஆண்டின் 32ம் இலக்க கடதாசி நாணயத்தாள் சட்ட விதியால் நிறுவப்பட்ட நாணய ஆணையாளர்களின் பணியாக இருந்த இலங்கையில் நாணயங்களை வெளியிடுகின்ற பணியை, 1950ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம்திகதி தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி முழுமையாகக் பொறுப்பேற்றது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட முதலாவது நாணயத்தாள்களை இங்கிலாந்தின் றெட்பரி விலகின்சன் கம்பனி அச்சிட்டது. மத்திய வங்கிக்கான நாணயக் குற்றிகளை தொடக்கத்தில் பம்பாய் மற்றும் கல்கத்தாவிலுள்ள இந்திய அரச மின்றசும் அதன் பின்பும் இங்கிலாந்தின் றோயல் மின்றசும் வார்த்தன.

1950இல் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்து 1951 இல் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் உருவத்துனடான தொடர் 1952இல் இரண்டாவது எலிசபேத் ராணியின் உருவத்துடனான தொடர் 1956இல் இலங்கைப் படைக்கலச் சின்னங்களுடனான தொடர் 1961 இல் எஸ் டபிள்யூ ஆர்.டி. பண்டார நாயக்காவின்

உருவத்துடனான தொடர், 1965 இல் முதலாவது பராக்கிரமபாகு மன்னரின் உருவத்துடனான தொடர் 1975 இலங்கை படைக்களச் சின்னங்களுடனான தொடர் 1979இல் இலங்கையின் வனவிலங்குகள் மற்றம் தாவரங்களைப் பிரதிபலிக்கும் தொடர் 1981ல் வரலாற்று ரீதியிலான மற்றும் தொல்பொருள் ரீதியான தொடர் 1987ல் வரலாற்று ரீதியான மற்றும் அபிவிருத்தி ரீதியான தொடர் 1991இல் இலங்கையின் பண்டைய கால மரபுரிமைகளை வெளிக்காட்டும் தொடர் போன்ற தொடர் நாணயங்கள் வெளியிடப்பட்டன.

பணம் என்பது பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள், தீர்ப்பணவுகளுக்கு வசதி செய்கின்ற ஒரு கருவி யாகும். நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைத் தவிர வேறு கொடுப்பனவு, தீர்ப்பனவு கருவிகள் பயன்பாட்டில் உள்ள போதிலும் இலங்கைப் பொருளா தாரத்தினுள் இன்னமுமே அதிகளவிலான கொடுக்கல் வாங்கல்கள் நாணயக் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைப் பயன்படுத்தியே நடைபெறுகினறன. சுற்றோட்டத் திலுள்ள ஒட்டு மொததமான நாணயத் தொகையில் 97% ஐ நாணயத் தாள்களே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன எஞ்சிய 3%தையும் நாணயக்குற்றிகள் உள்ளடக்குகி ன்றன.

பண்டைய காலத்தில் போலி நாணயக் குற்றிகள் தயாரிக்கப்டுவதைக் காணக் கூடியதாயிருந்த போதிலும் நாணயக் குற்றிகளைத் தயாரிப்பதற்குச் செலவாகின்ற செலவினம் நாணயக் குற்றிகளின் முகப்புப் பெறுமதியை விட அதிகரித்துள்ளதன் காரணமாக தற்போது போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கின்ற போக்குகளை மட்டுமே காணக் கூடியதாகவுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு கருவிக்கும் பணமாகச் செயற்படுவதற்குத் தேவையான அடிப்படைப் பண்பு அதற்குள்ள பொது அங்கீகாரமாக இருப்பதோடு அரசாங்கத்தின் சார்பில் நாணயம் வெளியிடுகின்ற தனி மேலாண்மை அதிகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நாணயத்தாளிலுள்ள சிறப்பியல்பான பண்புகள்**

சமமான முகப்புப் பெறுமதியைக் கொண்ட ஒரு சில நாணயத் தாள்களை ஆராய்கின்ற பொழுது ஒவ்வொரு நாணயத் தாள்களிலும் அச்சிடப்பட்டுள்ள தொடர் இலக்கம் தவிர்ந்த நாணயத் தாளின் நீளம், அகலம், நிறம் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறான படங்கள் மற்றும் வடிவங்கள் ஆகிய அனைத்தும் ஒன்றுடன் ஒன்றுச் சமச்சீராயுள்ளமை காணக்கூடியதாகவுள்ள சிறப்பியல்பான பண்பாகும். நாணயத் தாள்க்கு உரியதாயுள்ள மேற்படி சமச்சீரான தன்மை மற்றும் ஒன்றுக் கொன்று முழுமையான பதிலீடாக இருத்தல் ஆகிய சிறப்பியல்பான பண்பின் காரணமாகவே

போலி நாணயத்தாள்கள் அச்சிடுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

ஆதலால் போலியல்லாத ஒரு தூய நாணயத்தாளை போலியான நாணயத் தாளிலிருந்து பிரித்து அடையாளம் காணும் பொருட்டு போலி நாணயத்தாள்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு இலகுவான விதத்தில் பின்பற்ற முடியாத பாதுகாப்புச் சிறப்பம்சங்கள் மற்றும் அடையாளங்கள், நாணயத்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்துகின்ற சிறப்பியல்பான கடதாசிகளை உற்பத்தி செய்கின்ற கட்டத்திலேயே உட்புகுத்தப்படும் என்பதோடு ஏனைய பாதுகாப்பு அடையாளங்கள் நாணயத்தாள்களை அச்சிடப்படும் கட்டத்தில் நாணயத்தாளில் உட்புகுத்தப்படும் ஆயினும் இந்த அடையாளங்கள் தொடர்பாகவுள்ள அறியாமையும் அதேபோன்ற ஒரு நாணயத்தாள் தமக்குக் கிடைத்ததும் அந்த அடையாளங்களைப் பரிசோதிப்பதற்கு பொது மக்களிடையேயுள்ள உற்சாகமின்மையும் போலி நாணயங்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு பெரும் உதவியாய் அமைந்துள்ளது.

**போலி நாணயத்தாள்களின் உற்பத்தியை அங்கீகரிக்க முடியாதுள்ளதற்கான காரணம்:**

போலி நாணயத் தாள்களை உற்பத்தி செய்தல் என்பது சட்டரீதியில், பண்பாட்டு ரீதியில் மற்றும் பொருளாதார ரீதியில் என்றவாறு மூன்று துறைகளினூடாகவும் சமூகத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது

- **சட்ட ரீதியில்**

இலங்கையினுள் செல்லுபடியான நாணயங்களைச் சுற்றோட்டத்தில் சேர்க்கின்ற முழு அளவிலான மேலாண்மை அதிகாரம் நாணய விதிச்சட்டத்தின் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. போலி நாணயத் தாள்களை உற்பத்தி செய்தலானது அந்த முழுமையான மேலாண்மை அதிகாரத்தை சொந்த இலாப நோக்கங்களுக்கு பயன்படுத்துவதாக அமையும். இது நாணய விதிச் சட்டத்தை மீறுதல் தொடர்பாக தண்டணைக்குரிய ஒரு குற்றமாகும்

- **பண்பாட்டு ரீதியில்**

பணம் என்பது பற்றாக்குறையானதொரு பண்டமாகும். அதன் காரணமாகவே அதற்கு ஒரு பெறுமதி நிலவுகின்றது. இதன் பிரகாரம் ஒருவருக்கு இங்கு பற்றாக்குறையாகவுள்ள பண்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக அல்லது வேறு விதத்தில் தம்வசமுள்ள வளங்களை அர்ப்பணிக்க நேரிடுகின்றது. இதன் மூலம் பணம் எனும் அந்த பற்றாக்குறையான பண்டத்தை பெற்று கொள்ள இயலுமாயுள்ளது. ஆயினும் போலி நாணயத் தாள்களை உற்பத்தி செய்கின்ற ஒருவர் எவ்வித அர்ப்பணிப்பையும் செய்யாது

முறைகேடான விதத்தில் வளங்களைத் திரட்டிக் கொள்கின்றார் இது பண் பாட்டுக்கு எதிரான ஒரு செயலாகும். அதேபோன்று போலி நாணயத் தாள்களை போலியல்லாத நாணயத் தாள்களி லிருந்து பிரிந்து அடையாளம் காண முடியாதவரை போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்துள்ள நபர்களுக்கு போலியல்லாத நாணயத்தாள்களை வைத்துள்ளவர்களோடு சமமான விதத்தில் பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு போட்டியிட இயலுமாயுள்ளது. ஆயினும் போலி நாணயங்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு பயன்பாட்டிலுள்ள பணத்தைப் பெறுவதற்கான தறுவாய் செலவினம் குறைவாக உள்ளதனாலும் பணம் தொடர்பில் அவர்கள் காட்டுகின்ற குறைந்தளவான மதிப்பீட்டின் காரணத்தினாலும் சந்தையில் அநீதியான போட்டியுடன் அநீதியான விலையும் தீர்மானிக்கப்பபடுகின்றது. இவ்வாறானதொரு நிலைமையினுள் போலியான நாணயங்களை வைத்துள்ள நபர்களைச் சுற்றிலும் அநீதியான விதத்தில் வளங்கள் திரட்சியடையும் இது கூட பண்பாட்டு ரீதியில் கருதுகின்ற போது ஒரு குற்றமாகும்

* பொருளாதார ரீதியில்

இலங்கை மத்திய வங்கியின் பிரதான ஒரு குறிக்கோளாக உள்ள விலை உறுதிப்பாட்டை பேணிவரும் பொருட்டு மத்திய வங்கியினால் சுற்றோட்டத்தின் பொருட்டு விடுவிக்கப்படுகின்ற ஒதுக்கப் பணம் பிரதானமான இடையீட்டு மாறி வியாகவுள்ளது. ஏதேனுமொரு விதத்தில் போலி நாணயங்கள் சுற்றோட்டத்தில் சேர்க்கப்படும் எனின் அது இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகள் மற்றும் திரவத்தன்மை தொடர்பிலான உண்மை யான நிலைமைகளுக்கு இடையே மாற்றத்தை ஏற்படுத்தும் இதன் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களின் ஏற்புடைய தன்மை குறைவடைவதனால் பொருளா தாரத் திற்கு பாதகமான விளைவுகள் நேரிடலாம். இதற்கிணங்க போலி நாணயத் தாள்களை அச்சிடுதல் பொருளதார ரீதியிலும் தவறானதொரு செயலாகும்.

மேலே கூறப்பட்ட எதிர்விளைவுகளை ஏற்படுத்துகின்ற போலி நாணயங்களை உறபத்தி செய்வதற்கான முனைவுக்கும் அதனைத் தாடர்ந்து பேணி வருவதற்கும், இடமளிப்பதற்கு நாணயத்தை வெளியிடு வதற்கான சட்ட அங்கீகாரமுடைய ஒரே யொரு நிறுவனமாக இலங்கை மத்திய வங்கியினால் இயலாதுள்ளது. ஆதலால் போலி நாணயத்தை உற்பத்தி செய்வதற்கான அனைத்து முயற்சி களையும் முறியடிப்பதற்கும் அதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு சட்டரீதியான தண்டனையைப் பெற்றக் கொடுப்பதற்கும் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கின்றது.

க.தர்சனா
11 F

உசாத்துணை : குறிப்பேடு March, April 2010
இலங்கை மத்திய வங்கி, தொடர்பூட்டல்திணைக்களம்

# கணக்கீட்டு கொள்கையில் எண்ணக்கருக்களும் மரபுகளும்
# ACCOUNTING CONCEPTS AND CONVENTIONS IN ACCOUNTING PRINCIPLES

**Mrs. L. Sooriyakumaran**
**Lecturer in Accountancy**
**Advanced Technological Institute**
**(Old Student J/Hindu Ladies College)**

அறிமுகம்

லக மயமாக்கலின் கீழ் வணிக நடவடிக்கையில் ஏற்படும் மாற்றங்களிற்கேற்ப கணக்கீட்டு நியமங்களும் காலத்திற்குக் காலம்மீளாக்கம் செய்யப்படுகின்றன. 2012ஜனவரி 1ந் திக்தி தொடக்கம் நடைமுறைக்கு வரும் சர்வதேச கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசையும் நோக்கில் இலங்கையிலும் அன்றைய தினம் முதல் மீளாக்கம் செய்யப்பட்ட நியமங்களை இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அந்நியமங்கள் "இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்"(SLFRS) என பெயரிடப்பட்டுள்ளன.

2012 ஜனவரி 1ந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின்நோக்கம் நிறுவனமொன்றின் நிதிக் கூற்றுக்களை சீர்மதிப்புக் கணக்கீட்டின் (fair vale) அடிப்படையில்தயாரிப்பதன் மூலம் சிறந்த தோற்றப்பாட்டினை முன்னிலைப்படுத்துதல் ஆகும்.உலகளாவிய பொருளாதார நெருக்கடி வரலாற்றுக் கிரய அடிப்படையிலான நிதிக் கூற்றிலிருந்து உண்மை நிலையினை அறிய முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஏனெனில் உண்மையான நிறுவனப் பெறுமதிகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் காட்டப்படுதலாகும். புதிய நியமங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சொத்துக்களும் பரிப்புக்களும்அவற்றின் சீர்மதிப்புக்களில் காட்டப்படுகின்றன.2012 ஜனவரி 1ந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் 37இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் உள்ள அதே வேளை அவற்றுள் 08 நியமங்கள் (1 தொடக்கம் 8 வரை) சர்வதேச நிதிஅறிக்கையிடல் நியமங்களின் அடிப்படையில் அமைவதால் அவை இலங்கை நிதி அறிக்கையிடல்நியமங்கள் (SLFRS) எனவும் எஞ்சிய 29 நியமங்களும் சர்வதேச கணக்கீட்டு

நியமங்களின்அடிப்படையில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) எனவும்அழைக்கப்படுகின்றன.01.01.2014 லிருந்து SLFRS 10-13 வரையுமான நான்கு மீளாக்கம் செய்யப்பட்ட நியமங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது.01.01.2015 லிருந்து SLFRS 9 - நிதிக்கருவிகள் மீளாக்கம் செய்யப்பட்டு நடைமுறைக்குவரும்இலங்கைக் கணக்கீட்டு நியமங்களாவன இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின்பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவையாகும். அவை கீழ் வருவனவற்றினை கொண்டிருக்கும்,

A. ,லங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS)

B. இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (LKAS)

C. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் பேரவையினால் கடைப்பிடிக்கப்படும் பொருள் விளக்கங்கள் (IFRIC மற்றும் SIC)

2012 ஜனவரி 1ந் திகதியின் பின்னர் தயாரிக்கப்படவுள்ள நிதிக் கூற்றுக்களின் தொகுதியொன்றுபின்வருவனவற்றினை கொண்டிருக்கும்.

A. காலத்தின் இறுதியில் நிதி நிலைக் கூற்று (Statement of Financial Position)

B. காலத்திற்கான முற்றடக்க வருமானக் கூற்று (Statement of Comprehensive Income)

C. காலத்திற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று

D. காலத்திற்கான காசுப்பாய்வுக் கூற்று

E. பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின்தொகுப்பினைக் கொண்ட குறிப்புக்கள்.

F. மிக முந்திய ஒப்பீட்டுக் காலத்தின் ஆரம்பத்தில் நிதிநிலைக் கூற்று.

LKAS 01 - நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் எனும் நியமத்தின்படி முற்றடக்கவருமானக்கூற்று 2 வழிகளில் தயாரிக்கப்படலாம்.

(01) தனியான முற்றடக்க வருமானக் கூற்றினை தயாரித்தல்

(02) ஒரு பகுதி இலாப நட்டக் கூற்றினையும் (வேறான வருமானக் கூற்று) மற்றையது இலாப நட்டக் கணக்கில் ஆரம்பித்து பிற முற்றடக்க வருமானக் கூற்றினையும் காட்டும்வகையில் இரு கூற்றுக்களைக் கொண்டதாகத் தயாரித்தல். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க ஒழுங்குபடுத்திய கணக்கீடு பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம்தொழில் முயற்சியாளர்களிற்கும் அதனுடன் அக்கறையுடைய தரப்பினரிற்கும் தகவல் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது. இங்கு கணக்கீட்டை ஒழுங்குபடுத்த, நியமப்படுத்த கணக்கீட்டு கொள்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் கணக்கீட்டு நியமக்குழுவின்

உதவியோடு நியமத்தை எழுதல் மாற்றுதல் பிரசுரித்தல் போன்ற பணிகளை ஆற்றுகின்றது.இலங்கையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான எண்ணக்கருச் சட்டகமும் LKAS1ம் கணக்கீட்டுக் கொள்கைகளை விபரிக்கின்றது. நியமங்களின் சட்டவாக்கச் சொற்பிரயோகத்தைச் சரியான முறையில் விளங்கி நிதிக்கூற்றுக்களில் உரிய முறையில் பிரயோகிப்பதில் நிறுவனங்களே இடர்படுவதை அவதானிக்கலாம். மாணவர்களும் கணக்கீட்டுக் கொள்கைகளை அதன் சொற்பிரயோகங்களை விளங்கி அவை பற்றிய அறிவினைப் பெற்று அத்தகைய எண்ணக்கருக்களை நிதிக்கூற்றுக்களில் பிரயோகிக்கும் திறனை வளர்த்தாலே அனுபவத்தில் பிரயோகிக்கும் ஆற்றலை வளர்த்து அதற்கான மனப்பாங்கைப்பெறுவர்.இது பற்றிய அறிவில் மேம்படுத்துவது பரீட்சை நோக்கில் மட்டுமன்றி தொழில்நுட்பப்பாடமான வர்த்தகத்தினைச் சரியானமுறையில் கற்பதன்முலம் தொழில்புரியும் ஆற்றலை முயற்சியாண்மையை வளர்ப்பதுமாகும்.

கணக்கீட்டுக் கொள்கைகள்

பணத்தினால் அளவீடு செய்யக்கூடிய தொழில் முயற்சியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியில் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் என்பவற்றினை உள்ளீடாகப் பயன்படுத்தி பதிதல் வகைப்படுத்தல் சுருக்கமாக்குதல் அறிக்கையிடுதல் போன்ற கணக்கீட்டு தொழிற்பாடுகளின் ஊடாக தகவல்களை வியாபார இலாபநட்டக்கணக்கு ஐந்தொகை காசுப்பாய்ச்சற்கூற்று போன்ற வெளியீடுகளாக மாற்றும் நிதிக்கணக்கீட்டு பொறிமுறைக்கு கணக்கீட்டு கொள்கைகள் அடிப்படை விதிகளாக அமைகின்றன.இதில் பல எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. சில சட்டரீதியாக நியமத்தினால் முன்வைக்கப்படுவனவாகவும் சில நடைமுறையில் பின்பற்றல் வழமையானவை என்ற ரீதியில் மரபுகளாகவும் காணப்படுகின்றது. இதனால் கணக்கீட்டு கொள்கைகளிற்கான பட்டியலானது அவரவரின் தேவைக்கேற்ப நீண்டதாகவும் குறுகியதாகவும் அமையும். எனினும் கணக்கீட்டின் அடிப்படை எடுகோள்களில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அட்டுறு எண்ணக்கரு கொள்கை மாறா மரபு என்பன உள்ளடங்குகின்றன. கணக்கீட்டுக் கொள்கைகளை (Accountingprinciples) வகைப்படுத்தும்போது கணக்கீட்டுக் கருதுகோள்கள்/ எண்ணக்கருக்கள்(concepts)கணக்கீட்டு மரபுகள்(conventions) என இரு வகைப்படும்.

கணக்கீட்டு எண்ணக்கருக்கள் என்பதன் கீழ்

1. தொழில் முறைமை எண்ணக்கரு
2. இரட்டைவிளைவு எண்ணக்கரு
3. கால எண்ணக்கரு
4. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
5. கிரய எண்ணக்கரு
6. பண அளவீட்டு எண்ணக்கரு
7. இணைதல் எண்ணக்கரு
8. தேறல் எண்ணக்கரு
9. அட்டுறு எண்ணக்கரு
10. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கிய எண்ணக்கரு என்பவையும்

கணக்கீட்டு மரபுகள் என்பதனுள்

1. வெளிப்படுத்தல் மரபு Convention of Disclosure
2. கூர்ந்தமதி மரபு Convention of Conservatism
3. கொள்கை மாறா மரபு Convention of Consistency
4. பொருண்மை மரபு Convention of Materiality என்பவையும் உள்ளடங்குகின்றன.

முதலில் எண்ணக்கருக்களை நோக்கின்

1. தொழில் முறைமை எண்ணக்கரு/வியாபார அலகு எண்ணக்கரு/உளதார்ந்த தன்மை எண்ணக்கரு (**Separate entity concept**)

கணக்கியலில் தொழில் நிறுவனங்கள் உரிமையாளர்களிடமிருந்து வேறுபட்ட அம்சமாக கருதப்படுகின்றது. இதற்காக அலகு எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது.இதனால்தான் உரிமையாளர்களால் செலுத்தப்பட்ட மூலதனம்கூட நிறுவனத்திற்கு வேறு நபர்களால் கொடுக்கப்பட்ட கடன்களைப் போல் கருதி பொறுப்புப் பக்கத்தில் காட்டப்படுகின்றது. வியாபார அமைப்புகளில் கம்பனி அமைப்பு மட்டுமே தனிமனித அமைப்பாக கருதப்படுகின்றது. ஆனால் கணக்கியல் நோக்கில் எல்லா அமைப்புகளுமே தனிமனித அமைப்புகளாக கருதப்படுகின்றது. உரிமையாளர் மூலதனமிடல், வணிகத்திலிருந்து வளங்களை (சொத்துக்களை) அகற்றிக் கொள்ளல், மூலதனத்தை மீள எடுத்தல், எடுப்பனவுகளை மேற்கொள்ளல், வணிகத்தின் இலாப நட்டங்களை உரிமையாளரின் உரிமைக்குச் சீராக்குதல் போன்றவைகளை மேற்கொள்வது இந்த எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.

2. இரட்டைவிளைவு எண்ணக்கரு (**Dual Aspect Concept**)

ஒரு நடவடிக்கைக்கு வரவு, செலவு என 2 விளைவுகள் ஏற்படும், இவற்றின் அடிப்படையிலேயே இரட்டைப்பதிவு செய்யப்படுகின்றது.

சொத்துக்கள் = உரிமை + பரிப்புக்கள்

**3.** கால எண்ணக்கரு (**Accounting Period Concept**)

நிதிக்கூற்றுக்கள் அல்லது அறிக்கைகள் ஓர் காலப்பகுதியுடன் தொடர்புபட்டதாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதை இக்கோட்பாடு வலியுறுத்தி வருகின்றது.உதாரணமாக ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் காலம் நிதி அடிப்படையிலும் இலாபத்தைக் கணிப்பதற்கான கூற்றுக்கள் வருட அடிப்படையிலும் தயாரிக்கப்படுகின்றன.அட்டுறு எண்ணக்கருவும் இதனுடன் இணைந்ததாகச் செயற்படும். இதனை வெளிப்படுத்தும் போது 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கக் கம்பனிச்சட்டத்திற்கேற்ப அனைத்து வருடங்களிலும் மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடையுமாறு நிதியாண்டு காலத்தினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

**4.** தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (**Going concern concept**)

கணக்கியலில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது நிறுவனமானது எதிர்வரும் வருடங்களில் இயங்கும் என்ற அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றது.நிறுவனங்கள் தொடர்ந்து இயங்காது என்ற அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படும் போது தேறல் பெறுமதி அடிப்படையிலும், தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் தயாரிக்கும் போது வரலாற்றுக்கிரய அடிப்படையிலும் கணக்குகள் தயார் செய்யப்படுகின்றன. அத்துடன் வருமதிகளும் சென்மதிகளும் கணக்கில் சேர்க்கப்பட்டு மீதிகளாக காட்டப்படுவதன் நோக்கம் நிறுவனமானது தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில்தான். வணிகமொன்றினது செயற்பாட்டுக் கருமங்களை மட்டுப்படுத்தும் நிலைமைகள் அல்லது வணிகத்தினை மூடவேண்டிய ஆபத்து எதுவும் இல்லை என்ற கருதுகோள் இந்த எண்ணக்கருவினால் முன்வைக்கப்படுகின்றது.

**5.** கிரய எண்ணக்கரு (**Historical Concept**)

கிரய எண்ணக்கருவின்படி:-நிலையான சொத்துக்கள் கொள்வனவு விலையில் பதியப்பட வேண்டும்.காலமாற்றங்கள் சொத்தின் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தாது தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். இதன் மூலம் நிலையான

சொத்தின் உண்மைப் பெறுமதியைப் பேணுவதும், பெறுமானத்தேய்வுசெய்வதும், நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதும் இலகுவாகும்.
சொத்துக்களிற்கான கணக்கீட்டின்போது நிறுவனமொன்று வரலாற்றுக்கிரய எண்ணக்கருவிலிருந்து விலகிச்செல்லும் சூழலில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல்
சரக்கிருப்பினை தேறிய தேறத்தக்க பெறுமதிக்கு மதிப்பிடல் என்பவை இடம்பெறும்.

**6.** பண அளவீட்டு எண்ணக்கரு (**Money Measurement concept**)

கணக்கியலில் கணக்கு வைப்பு, பணத்தைக்கொண்டு அளவிடக்கூடிய உண்மை நிகழ்ச்சிகளை பதிவு செய்யப்படுகின்றது. காரணம் பணம்தான் நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையினை கூட்டிக்கழிப்பதற்கு வசதியான ஓர் அளவுகோல் ஆகும். ஓர் நடவடிக்கையின் விளைவுகளை கணக்கு ஏடுகளில் பதியும் போது அதன் பணமதிப்பு எவ்வளவோ அத்தொகையே கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்படுகின்றது. பிற்காலத்தில் பணத்தின் பெறுமதியில் ஏற்படும் மாற்றம் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

**7.** இணைதல் எண்ணக்கரு/பொருந்தச் செய்யும் எண்ணக்கரு/ஒப்புமை எண்ணக்கரு (**Matching Concept**)

நிதியாண்டிற்குரிய செயற்பாட்டுப் பெறுபேற்றினை நிச்சயிக்கும்போது அந்நிதியாண்டு காலப்பகுதியில் இனங்காணப்பட்ட வருமானங்களுக்கெதிராக அனைத்து வருமானச் செலவுகளும் ஒப்பிடப்படுதல் வேண்டும். கணக்கீட்டுக் காலத்தினை அடிப்படையாக கொண்டதாக இவ் எண்ணக்கரு உள்ளது. அதன்படி தேறிய இலாபத்தை அல்லது தேறிய செயற்பாட்டு விளைவைத் தீர்மானிக்கும் போது வருமானம் பெறும் காலத்துடன் அதனுடன் தொடர்புபடும் செலவினை ஒப்பீடு செய்தல் வேண்டும்.

**8.** தேறல் எண்ணக்கரு / கைக்கெட்டிய எண்ணக்கரு / வருமானக்கோட்பாடு (**Realization Concept**)

வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழும் சந்தர்ப்பத்திலேயே அவற்றினது விளைவுகள் கணக்குகளில் பதிவு செய்யப்படல் வேண்டும். பொருட்கள் வந்து சேராவிடினும் கூடக் கொள்வனவொன்று இடம்பெற்றதாயின் அதனை ஏடுகளில் கொள்வனவாகப் பதிவு செய்ய முடியும்.விற்பனைகள் நிகழ்ந்ததுமே அவை

ஏடுகளில் காட்டப்பட முடியும். அவை காசு பெறப்பட்டவையாகவோ அல்லது காசு பெறப்படாதவையாகவோ இருக்க முடியும். எனினும் எதிர்வரும் நிதியாண்டுகள் தொடர்பான விற்பனைக் கோரிக்கைகள் நடப்பாண்டில் கிடைக்கப்பெறினும் அவை நடப்பாண்டில் விற்பனையாகக் காட்டப்பட முடியாது. அத்துடன் வாடகைக் கொள்வனவில் கொள்வனவாளனிற்கு பொருளின் உடமையானது (owner ship) கடைசித் தவணைப்பணம் கட்டும்போதே கிடைக்கும்.ஒப்பந்தக் கணக்குகளில் ஒப்பந்தம் முடிவுற முன்னரே இலாபம் கவனத்தில் எடுக்கப்படும்.

**9.** அட்டுறு எண்ணக்கரு (**Accrual Concept**)

குறித்த நிதியாண்டிற்காக வணிகமொன்றினது நிதிக்கூற்றின் பெறுபேற்றினை (இலாபத்தன்மை, வினைத்திறன்) அளவிடும் போது நிதியாண்டுக்குரிய அனைத்து உழைக்கப்பட்ட வருமானங்களையும் காசாகப் பெறப்பட்டிருப்பினும் பெறப்படாதிருப்பினும் கூட அவற்றை வருமானமொன்றாகவும் நிதியாண்டுக்குரிய அனைத்துச் செலவுகளையும் காசாகச் செலுத்தப்பட்டாலும் செலுத்தப்படாதிருப்பினும் அவற்றைச் செலவொன்றாக இனங்காணப்பட வேண்டும் என இவ்வெண்ணக்கரு வலியுறுத்துகின்றது.

**10.** தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கிய எண்ணக்கரு (**Substance over form concept)**

கொடுக்கல் வாங்கலொன்றின் சட்டத்தன்மையை விட அதன் பொருளாதார ரீதியான கருத்து(இயல்பு நிலை) முக்கியத்துவமானது என இந்த எண்ணக்கருவினால் கூறப்படுகின்றது. கணக்கீட்டு எண்ணக்கருப்பின்னணியினுள் காட்டப்படுகின்ற முறையின்படி கணக்கீட்டுத் தகவல்கள் நம்பிக்கையுடையதாக இருக்க வேண்டியதுடன் அது தொடர்பான மிக முக்கியமாகஉண்மைத தன்மைநம்பிக்கைத்தன்மை என்பன பாதுகாக்கப்படல் வேண்டும்.

மரபுகளின் கீழ்:-

**1.** வெளிப்படுத்தல் எண்ணக்கரு (**Full Disclosure Concept**)

கணக்கீட்டு நியமங்கள் நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமாக குறிப்புகளை வேண்டி நிற்கின்றன. வெளிப்படுத்தல் எண்ணக்கருவின்படி தீர்மானம் மேற்கொள்ளும் அனைத்து தரப்பினரிற்குமான முழுமையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

2. பாதுகாப்பு எண்ணக்கரு/ செயலறிவு எண்ணக்கரு/ கூர்ந்தமதி எண்ணக்கரு/புத்திகூர்மை எண்ணக்கரு/ முன்னெச்சரிக்கை எண்ணக்கரு(**Conservatism Concept/Prudent Concept**

இந்த எண்ணக்கருவின்படி எதிர்பார்க்கப்படும் இலாபங்கள் நிதிக்கூற்றில் பதியப்படுவது வரவேற்கப்படவில்லை. அதேநேரம் சாத்தியமான நட்டங்கள் பதிவது வரவேற்கப்படுகின்றது. இவ் எண்ணக்கருவின் பிரயோகத்தின்படி மிகைப்படுத்திய இலாபத்தைக்காட்டி பிழையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது விலக்கப்படுகின்றது.இது நிறுவனம் முறிவடைவதற்கு வழிவகுக்கும்.

3. கொள்கை மாறா எண்ணக்கரு (**Consistency Concept**)

கணக்கீட்டுத் தகவல்களை பதிவு செய்யும்போதும், நிதிக்கூற்றுக்களை த்தயாரிக்கும் போதும் பின்பற்றிய அடிப்படைகள், நடைமுறைகள், கொள்கைகளை அடிக்கடி மாற்றக்கூடாது என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. அதாவது ஒரு நிறுவனம் கணக்கியலில் என்ன நடைமுறையினை பின்பற்றுகின்றதோ அதே நடைமுறையினையே அடுத்துவரும் ஆண்டுகளில் தொடர்ந்து பின்பற்றுதல் வேண்டும். எனினும் சில சந்தர்ப்பங்களில் நிறுவனங்கள் முறைகளுக்கான மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

4. பொருண்மை எண்ணக்கரு/முக்கிய அளவு எண்ணக்கரு (**Materiality Concept**)

அடிப்படையில் ஒரு சிறிய தொகையுடன் சம்பந்தம் கொண்ட ஒரு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவிடத்தேவையில்லை. முக்கியஅளவு எண்ணக்கருவின்படி முக்கியமற்ற தகவல்களை விலக்கவும், ஆனால் சகல பெறுமதியான தகவல்களை உள்ளடக்கவும் வேண்டும். முக்கியமற்ற தகவல் என்பது தகவலின்தன்மை அளவு என்பவற்றை அவற்றிடையே ஒப்பீடு செய்து தீர்மானிக்கப்படுகின்றது. சதங்களை தவிர்த்து.

முடிவுரை

கணக்கீட்டு கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களின் சரியான நடுநிலைத்தன்மை பேணப்பட்டு தரமான பண்புடையதாக நிதிக் கூற்றுக்கள்

விளங்க முடியும். இதன் மூலம் நிதிக்கூற்றுக்கள் வழங்கும் தகவல்களைப் பயன்படுத்தி பயனுறுதி மிக்க தீர்மானம் எடுக்க முடியும்.சூழல் பற்றிய பயனுடைய தகவல்கள் நிறுவனத்தின் பயனுறுதியான கட்டுப்பாட்டிற்கு உதவும். தகவல்கள் உச்சக்கிரயத்தில் வழங்கப்படும்.பெறுபவர் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.கால அடிப்படையான தகவலாகக் காணப்படும்.போதுமான அளவு சரியானதாகவும் நோக்கத்திற்கேற்பவும் இருக்கும் அத்துடன் பெறுபவர் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். எனினும் பண அளவீட்டு எண்ணக்கருவினைப் பயன்படுத்துவதன் மூலம் பணப்பெறுமதியின் மாறும் தன்மை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.பணரிதியாக அளவிடக் கூடியவையே கணக்குகளில் உள்ளடங்குவதால் பணரீதியாக அளவிடமுடியாத மிகவும் முக்கியமான தகவல்கள் கூட வெளிப்படுத்த முடியாமை.திறமையான முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளாமை.அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் கவனத்தில் கொள்ளாமை.வேலை நிறுத்தங்களால் ஏற்படும் பாதிப்பு போன்ற தீமைகளும் காணப்படுகின்றன.

மேற்குறித்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கணக்கீட்டுக் கொள்கைகளை சரியான விதத்தில் ஒவ்வொரு பரிமாற்றங்களிற்கும் பிரயோகிப்பதன் மூலம் முறையான கணக்கீட்டுப் பதிவுகளை மாணவர்கள் மேற்கொள்ள முடியும்.

உசாவியவை:

http://www.casrilanka.com/casl

A *Textbook of Financial Cost and Management Accounting*

**Sri Lanka Accounting Standards Changes with effect from 01 January 2012, AAT**

**LKAS 1,(2012), The Institute of Charted Accountants of Sri Lanka.**

**Advanced Financial Accountings ,(2012) ,AAT ,Final**

**Sutharsan STD, (2001), "Advanced level accounting",pg 04**

# முதலீட்டு தீர்மானங்கள்

இலாபம் உழைக்கதக்க நிலையான சொத்துகளில் மேற்கொள்ளப்படும் நிதி முதலீடு எனப்படும். பல்வேறு வகையான மூதலீடுகளில் இருந்து ஒரு சிறந்த முதலிட்டை தெரிவு செய்தல் முதலீட்டு தீர்மானம் எனப்படும் இம் முதலீட்டு தீர்மானம் மேற்கொள்ளும் போது முதலின் கிரயம் மாற்றும் முதலீட்டிற்கான வாய்ப்புக்கள் என்பன கருத்தில் கொள்ளப்படும் நீண்ட கால முதலீட்டு தீர்மானத்திற்கு உதவும் நுட்ப முறைகள் பற்றி முதலீட்டுத் தீர்மானம் எடுத்துக் கூறுகின்றது

முதலீட்டு தீர்மானத்தின் முக்கியத்துவங்கள் வருமாறு

1. இது நீண்ட கால முதலீடு என்பதனால் பிழையான தீர்மானமாக அமையின் நீண்ட காலத்திற்கு நட்டம் ஏற்படும்
2. நீண்ட காலம் என்பதனால் அதிக நிதி ஈடுபடுத்தப்பட்டிருக்கும்
3. நீண்ட கால முதலீடு ஆகையால் அதனை மீண்டும் இலகுவாகப் பணமாக மாற்ற முடியாதிருத்தல்

முதலீட்டுத் தீர்மானம் எடுத்தல் படிமுறைகள்

1. பல்வேறு முதலீடுகளை அனங்காணல்
2. முதலீடுகளை மதிப்பீடு செய்தல் முதலீடுகளிற்கான காசுப் பாய்ச்சலை மதிப்பீடு செய்தல்
3. முதலீட்டின் மீதான திரும்பலை மதிப்பீடு செய்தல்
4. பல்வேறு முதலீடுகளிற்குள் மிகச் சிறந்ததை தெரிவு செய்தல்
5. தெரிவு செய்யப்பட்ட முதலீட்டுச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்

செயற்றிட்டத்தில் காசுப்பவாய்சல்கள்

முதலீட்டால் எதிர்காலத்தில் எல்லா வகைகளிலும் உள்வரும், வெளிச்செல்லும் சகல காசும் காசுப்பாய்சல் எனப்படும் இது இரண்டு வகைப்படும்

1.காசு உட்பாய்சல்

ஒரு செயற்திட்டத்தில் முதலீடு செய்வதால் எதிர் காலத்தில் எல்லா வகை

ளிலும் கிடைக்கும் என எதிர்பார்கப்படும் சகல காசுப் பெறுவனவுகளும் காசு உட்பாய்சல் எனப்படும்

காசு உட்பாய்ச்சல் தொடர்பான உதாரனம்

1. செயற்றிட்டத்தின் வருமானம்
2. அரசின் உதவியும் வெகுமதியும்
3. கழிவுப் பொருட்களின் விற்பனை மூலமான பெறுவனவு
4. வரிமீளக்கிடைத்தல் மீதிகள்
5. தொழிற்பாடு முதலை மீண்டும் அறவிடல்
6. வாடிக்கையாளரிடம் இருந்து கிடைக்கும் பணம்

2.காசு வெளிப்பாய்ச்சல்

ஒரு செயற்திட்டத்தில் முதலீடு செய்வதால் எதிர்காலத்தில் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கும் காசுக் கொடுப்பனவுகள் காசு வெளிப்பாய்சல் எனப்படும்

காச வெளிப்பாய்சல் தொடர்பான உதாரனம்

1. ஆரம்ப முதலீட்டு கிரயம்
2. மேலதிக மூலதனம் இடல்
3. பொருட்கள் உழைப்புக்கள் தொடர்பான கொடுப்பனவுகள்
4. வரிக்கொடுப்பனவு
5. கழிவுப் பொருள் பெறுமதி அடிப்படையில் கொடுக்கும் வரி
6. தொழிற்பாடு முதல் கொடுப்பனவு

முதலீட்டுத் தீர்மான முறைகள்

- மரபு ரீதியான முதலீட்டுத் தீர்மான முறை / கழிவு செய்யப்படாத காசோட்ட முறை
  1. திரும்பல் அளித்த காலம்
  2. முதலீட்டு கணக்கீட்டு வருவாய் விகிதம்
- நவீன ரீதியான முறை கழிவு செய்யப்பட்ட காசோட்ட முறை
  1. தேறிய இன்றைய பெறுமதி
  2. உள்ளக வருவாய் வீதம்

01. மரபு ரீதியான முதலீட்டுதீர்மானம் / கழிவு செய்யப்படாத காசுப் பாய்ச்சல் முறை

முதலீட்டின் காசுப்பாய்சலின் இன்றைய பெறுமதியை கருத்திற் கொள்ளாது செயற்றிட்ட தீர்மானம் மேற்கொள்ளும் முறையே கழிவு செய்யப்பாடதா காசுப்பாய்ச்சல் முறை ஆகும்.

## 1. திரும்பல் அளித்தல் கால முறை (Payback Period Method)

செயற்றிட்டம் ஒன்றில் முதலிட்ட தொகையை எவ்வளவு காலத்தில் மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்பது திரும்பல் அளித்தல் காலமாகும் இத் திரும்பல் அளித்தல் காலத்தில் அடிப்படையின் முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்ளுதல் திரும்பல் அளித்தல் கால முறையாகும்.

பொதுவாக குறைந்தளவு திரும்பி வரும் காலத்தினை உடைய முதலீடுச் செயற் திட்டத்தின் ஆபத்து குறைவானது என்பதனால் அத்தகைய இயல்பினை உடைய செயற் திட்டங்கள் பெரிதும் விரும்பப்படுகின்றன.

### திரும்பல் அளித்தல் கால முறையின் அனுகூலங்கள்

1. கணிப்பது விளங்கிக்கொள்வது இலகுவானது
2. நீண்ட காலத்திலிருந்து எழக்கூடிய நட்ட அச்சம் இழிவுபடுத்தப்படுதல்
3. கிடைக்கும் தேறிய காசை நேரடியாக கருத்தில் கொண்டு மதிப்பிடலாம
4. ஒன்றிற்கு மேற்பட்ட முதலீடுகளில் சிறந்ததை தெரிவு செய்ய உதவும்

### திரும்பல் அளித்தல் கால முறையின் பிரதி கூலங்கள்

1. பணத்தில் இன்றைய பெறுமதி கவனத்தில் கொள்ளப்படவில்லை
2. முதலீடு திரும்பி வரும் காலம் ஒரு மதிப்பீடாகவே உள்ளது
3. முதலிட்ட பணம் விரைவாக பெற்றுக் கொள்ளும் காலம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது மீளப் பெற்றதன் பின்னராக பெறுபேறுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை

## 2. கணக்கீட்டு வருவாய் வீதம் / சராசரி வருவாய் வீதம் (Accounting Rate of Return / Average rate of Return)

சராசரி முதலுக்கான சராசரி வருட இலாப வீதமே கணக்கீட்டு வருவாய் வீதம் ஆகும் முதலீடுகள் தெரிவு செய்யப்படும் போது அதிக கணக்கீட்டு வருவாய் வீதம் கொண்ட முதலீடு தெரிவு செய்யப்படும்

இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்

$$\text{குணக்கீடு வருவாய் வீதம்} = \frac{\text{சராசரி வருட இலாபம்}}{\text{சுராசரி முதலீடு}} \times 100$$

## 2.நவீன ரீதியான முறை கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் முறை

முதலீட்டின் காசுப்பாய்ச்சலின் இன்றைய பெறுமதியை கருத்தில் கொண்டு

செயற்திட்ட தீர்மானம் மேற்கொள்ளும் முறை கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்சல் முறை ஆகும் . மரபு ரீதியான முறையில் உள்ள குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய இம் முறை பின்பற்றப்படுகின்றது கழிவுக் காரணி (நடை முறைச் சந்தை வட்டி வீதம்) கருத்தில் கொள்ளப்பட்டு காசுப் பாய்சலின் இன்றைய பெறுமதி கணிப்பீடு செய்யப்படும் இதனால் பணவீக்கம் விளைவுகள் தவிர்க்கப்படும் எதிர்கால காசோட்டத்தில் பணவீக்க விளை வுகளை நீக்கி பணத்தின் இன்றைய பெறுமதியில் காசோட்டம் கருத்தில் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படும் முதலீட்டு தீர்மானம் துல்லியமானதாக அமையும்.

1. தேறிய இன்றைய பெறுமதி (Net Present Value - NPV)

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காசுப் பாய்ச்சலின் இன்றுள்ள பெறுமதி நிகழ்காலப் பெறுமதி ஆகும். இதுனை மதிப்பிட கழிவு வீதம் அவசியம். பணத்தின் இன்றைய பெறுமதியை கணிக்கும் போது நடைமுறையில் உள்ள சந்தை வட்டி வீதமே கழிவுக் காரணி எனப்படும் முதலீட்டுத் திட்டம் ஒன்றின் காசு உட்பாய்ச்சல்களின் இன்றைய பெறுமதிக்கும், காசு வெளிப்பாய்சல்களின் இன்றைய பெறுமதிக்கும், இடை யில் உள்ள வேறுபாடு தேறிய இன்றைய பெறுமதி ஆகும். இன்றைய பெறுமதியை கணிப்பிடும் முறை வருமாறு:

$$PV = \frac{FV}{(1+r)^n}$$

PV - இன்றைய பெறுமதி

Fv- எதிர்கால பெறுமதி

T- ஆண்டிற்கான வட்டி வீதம்

N – ஆண்டுகள்

தேறிய இன்றைய பெறுமதியை கணிப்பிடும் முறை வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| தேறிய இன்றைய பெறுமதி | = | காசு உட்பாய்ச்சலின் இன்றைய பெறுமதி | - | காசு வெளிப்பாய்ச்சலின் இன்றைய பெறுமதி |

இன்றைய பெறுமதிக்கு உதாரணம்

கம்ஸ் கம்பனி அதன் முதலீட்டின் மீது 10% வருவாயை உழைக்கும் போது இரண்டு

வருடங்களின் பின் 10,000/= பெற தற்பொது எவ்வளவு தொகை முதலிட வேண்டும்.

$$Pv= \frac{Fv}{(Hr)^n}$$

$$= \frac{10000}{(1+0.1)^2}$$

$$= \frac{10000}{(1.0)^2}$$

$$= 8.264/=$$

இருண்டு வருடங்களின் பின் 10.000/= பெற தற்போது 8264/= முதலிட வேண்டும்.

தேறிய இன்றைய பெறுமதிக்கு உதாரணம்:
முதலீட்டிற்காக தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்டம் ஒன்றின் தேறிய காசுப் பாய்ச்சலின் அல்பா கம்பனி பின்வருமாறு மதிப்பீடு செய்துள்ளது.
முதலீட்டிற்கு ஆகும் காசு வெளிப்பாய்ச்சல்5000,000
முதலீட்டிலிருந்தான 1ம் வருட முடிவில் தேறிய காசுப்பாய்ச்சல் 900 , 000
முதலீட்டிலிருந்தான 2ம் வருட முடிவில் தேறிய காசுப்பாய்ச்சல்1800, 000
முதலீட்டிலிருந்தான 3ம் வருட முடிவில் தேறிய காசுப்பாய்ச்சல்2400, 000
முதலீட்டிலிருந்தான 4ம் வருட முடிவில் தேறிய காசுப்பாய்ச்சல் 1600,000
வேண்டப்படுவது

10% கழிவு வீதத்தில் இந்த முதலீட்டின் இன்றைய பெறுமதியை (NPV) கணிப்பிடுக
விடை

அட்டவணை A யின் படி கழிவுக் காரணி

| முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு |
|---|---|---|---|
| 0.909 | 0.826 | 0.751 | 0.683 |

முதலீட்டினை நடைமுறைப்படுத்தும் ஆண்டினை 0 ஆண்டு எனக் கருதுக

| ஆண்டு | காசுப்பாய்ச்சல்கள் | கழிவுக்காரணி (10%) | நிகழ்காலப் பெறுமதி (PV) |
|---|---|---|---|
| 0 | - 5000,000 | 1 | -5000,000 |
| 1 | +900,000 | 0.909 | +818,100 |
| 2 | + 1800,000 | 0.826 | +1486,800 |
| 3 | +2400,000 | 0.751 | +1802,400 |
| 4 | +1600,000 | 0.683 | +1092,800 |
| முதலீட்டின் தேறிய இன்றைய பெறுமதி (NPV) | | | + 200,100 |

2. உள்ளக வருவாய் வீதம் (Internal Rate of Reurn - IRR)

தேறிய காசுப்பாய்ச்சலின் இன்றைய பெறுமதி பூச்சியமாக உள்ள போது உள்ள கழிவு வீதமேஉள்ளக வருவாய் வீதம் ஆகும். அதாவது எவ் வீதத்தில் வட்டி வீதம் அமையும் போது தேறிய காசுப் பாய்ச்சலின் இன்றைய பெறுமதி ஆரம்ப முதலீட்டுத் தொகைக்கு சமனாக வருமோ அவ் வீதமே உள்ளக வருவாய் வீதம் ஆகும்.

உள்ளக வருவாய் வீதம் கழிவுக் காரணிக்கு சமனாக / கழிவுக் காரணியை விட அதிகமாக அமையின் செயற்திட்டம் ஏற்கப்படும். உள்ளக வருவாய் வீதம் கழிவுக் காரணியை விட குறைவாக அமையின் செயற்திட்டம் நிராகரிக்கப்படும்.

1. சமன்பாட்டு முறை

$$IRR = A + \frac{C}{C-D} X (B-A)$$

A- குறைவான வட்டி வீதம்/ அதிக NPVயில் வட்டி வீதம்

B - Aயை விட கூடிய வட்டி வீதம்

C- A வட்டி வீதத்தில் NPV

D- Bவட்டி வீதத்தில் NPV

உதாரணம்: கர்மிசன் கம்பனியின் முதலீட்டு தீர்மானத்திலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களின் சுருக்'கம் வருமாறு

| ஆண்டு | முதலீடு (மில்.ரூபா) | கழிவுக் காரணி (12%) | PV (மில்.ரூபா) | கழிவு காரணி (18%) | PV (மில்.ரூபா) |
|---|---|---|---|---|---|
| 0 | (45) | 1.000 | 45.00 | 1.000 | (45.00) |
| 1 | 22 | 0.8929 | 19.64 | 0.8475 | 18.64 |
| 2 | 20 | 0.7972 | 15.94 | 0.7182 | 14.36 |
| 3 | 17 | 0.7118 | 12.10 | 0.6086 | 10.35 |
| | | NPV12% | 2.69 | NPV18% | (1.65) |

$$IRR = A + \frac{C}{C - D} X (B-A)$$

$$=12+ \frac{2.69}{(2.69 - (-1.65))} X (18-12)$$

$$=12+ \frac{2.69}{4.32} x 6$$

$$=12+ (0.6198 x 6)$$

$$= 12+ 3.72$$

$$=15.72\%$$

*உசாத்துணை:*

- *உயர் கணக்கீடு - பகுதி* ii - *குமாரசாமி கலைச் செல்வன் பக்கம்* - ***197- 220***
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் - ***13*** பக்கம் - ***168 - 182***
- *கணக்கீடு - பகுதி 02* S.S. Karunithas *பக்கம்* - - ***30***

பா.தக்ஷாயினி
2014 வர்த்தப்பிரிவு

# உலக வணிகங்களில் ICT வகிபாகம்

மனித தேவைகளையும் விருப்பங் களையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் வணிகமாகும். வணிக வளர்ச்சிக் கட்டங்களில் தற்போது அறிவை அடிப்படையாகக் கொண்ட தகவல் யுகம் விளங்குகின்றது. இதில் தகவல் தொடர்பாடல் நுட்பம் முக்கி யத்துவம் பெறு கின்றது.

E- Commerce

இணையம் மற்றும் உலகலாவிய வலையினூடாக இலத்திரனியல் முறைமைகளைப் பயன்படுத்தி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கிடையில் பொருட்கள் மற்றும் சேவைகள் வாங்குதல் மற்றும் விற்றல் போன்ற நடவடிக்கைகள் E- Commerce எனப்படும்

E- Business

மின்வியாபாரமொன்று பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குதல் மற்றும் விற்றல் போன்றவை மட்டுமல்லாது ஏனைய வியாபார சேவைளாக சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் உறவுகள், வியாபார பங்குதாரர்களின் தொடர்பு மற்றும் இலத்திரனியல் தொழிற்பாட்டசைவுகள் போன்ற அனைத்தையும் குறிக்கும்.

E-வியாபார கொடுக்கல் வாங்கல் வகைகள்

1. B2B: Business to Business

வியாபாரமொன்றின் இன்னுமோர் வியாபாரத்துடன் மின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

Eg: www.amazone.com

2. B2B : Business to Consumer / customer

வியாபாரமொன்றின் நுகர்வோரிடம் / வாடிக்கையாளருடன் தொடரறா (online) முறைமையிலான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்

Eg: www.sampath.lk

3. C2C : Cusutomer to customer

நுகர்வோர் ஒருவர் தனது பொருட்களை online முறைமையில் இன்னோர் நுகர் வோருக்கு விற்றல்

Eg: www.ebye.com

4. B2E: Business to Employee

வியாபாரம் ஒன்று தனது ஊழியர்களை அக இணைபத்தை பயன்படுத்தி தொடர்புகளை மேற்கொள்ளுதல்

5. G2B : Government to Business

அரசாங்கத்திற்கும் வியாபாரமொன்றிற்கும் இடையிலான மின் வர்க்த்தினை குறிக்கம்

6. G2C : Government to Citizen


அரசாங்கம் தனது மக்களுக்கான சேவைகளை மின் வர்த்தக முறையில் வழங்குதல்

Eg: Land Registration

7. C2B: Customer to Business

நுகர்வோர் வியாபாரமொன்றுடன் மின் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

மின்வர்த்தகத்தின் பிரதாமான பங்கு பெறுவோர்




மின் வர்க்கத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் பெறும் நன்மைகள்

- 24 மணிநேரசேவைகளை பெறமுடிதல்

- வீடு /அலுவலகம் பயணம் எங்கிருந்தும் சேவையைப் பெறமுடியும்
- பாரிய அளவிலான சந்தை வாய்புகளை பயன்படுத்தி கொள்ள முடியும்
- இலகுவானதும் விரைவானதுமான பணப்பரிமாற்றம்

மின்வர்த்தகத்தின் மட்டுப்பாடுகள்

- இலகுவில் காலவதியாகும் பொருட்களில் விற்றல் வாங்குதலில் ஏற்படும் மட்டுப் பாடு

Eg: Fruits, Vegetable & Flowerr etc

- அனைத்து வாடிக்கையார்களும் இணையம் போன்ற ICT கருவிகளை பயன்படுத்து வதில் ஏற்படும் மட்டுப்பாடு

## Brick & Clicks

Officer = Bricks

Online = Clicks

- Brick / click வியாபார மாதிரியம் offline, online ஆகிய இரண்டிணையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வியாபாரத்தினை குறிக்கின்றது.

Eg: வாடிக்கையாளர் ஒருவர் மின்வர்த்தகத் தகவலைக்கடப்பிடத்தினூடு பொருள் ஒன்றிகான கட்டளையை கொடுத்து அப்பொருளினை கடையில் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு

## Pure click

Pure Click வியாபார மாதிரியத்தில் வாடிக்கை யாரள்கள் பொருளொன்றினை மின்வர்த்தக வலைக்கடப்பிடத்தினூடு கட்டளையிட்டு அப் பொருள் வாக்கையாளரை நேரடியாக சென்றடைவதைக் குறிக்கும்

## E- Marketing

- இணையத்தினுஸடாக பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்தும் செயற் பாடு மின்சந்தைப்படுத்தல்/ இணையப்படுத்தல் என அழைக்கப்படும்
- மின் சந்தைப்படுத்தல் மின்அஞ்சல்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது

மின்சந்தைப்படுத்தலின் வரையறைகள்

- மின்சந்தைப்படுத்தலின் போது உண்மையான / போலியான பொருட்கள் இனங் காண்பதிலுள்ள இடர்பாடு
- மின்சந்தைப்படுத்தலின் பொருள் ஒன்றினை வாடிக்கையாளருக்கு நேரடியான முறையில் விளக்கமுடியாத நிலை

## Information Broker

Information Broker என்பது நபர் / வியாபாரமொன்றினைக் குறிக்கின்ற அதே வேளை வாடிக்கையாளர் ஒருவருக்காக தகவல்களை கையாள்வதாக இருப்பார்

Eg: சட்டரீதியான ஆலோசகர்கள்

வியாபாரம் சம்பந்தமான தகவல் பரிமாற்றம்

## Database Marketing

தரவுத்தள சந்தைப்படுத்தல் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர் தரவுத்தளத்திலிருந்து தரவுகளைப் பெற்று நேரடியான முறையில் சந்தைப் படுத்தலினைக் குறிக்கும்

### Shopping Cart Software in E- Commerce

- மின்வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகின்ற ஓர் மின்வர்த்தக மென்பொருளாகும் இது இணையத்தினூடாக கொள் வனவில் பொருட்களை கொள்வனவு செய்கின்ற வழிமுறையைத் தருகின்றது.

## Advantages

1. கொள்வனவு செய்கின்ற பொருட்களின் விபரப்பட்டியலை மின்வர்த்தக வலைக் கடப்பிடத்தில் ஒன்று சேர்த்தல்
2. கோள்வனவு கட்டளைக்கான மொத்தத் தொகையினை தன்னியக்க முறையில் கணித்தல்

## Reference:


Tim-(Teacher Instruction Manual) Gr-12

Electronic Commerce (A Managerial Perspective)

EFRAIM TURBAN

JAELEE

DAVISKING

H-MICHAEL CHUNG



த.கவஸ்திகா

2014 வர்த்தகப்பிரிவு

# மாணவர்களின் அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

திருமதி.சு.கோவர்த்தனன்
ஆசிரியர்
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி

கல்வி அமைப்பின் பல்வேறு தொழிற்பாடுகளினூடாகவும் கிடைக்கும் இறுதி விளைவு மாணவர்களின் அடைவு ஆகும். மாணவர்களும் அவர்களுடைய கல்வி சார் அடைவுகளும் பாடசாலைச் செயன்முறையில் முக்கியமானதாகும். மாணவர்களின் அடைவு தொடர்பான மதிப்பீடுகள் கற்றலின் ஒவ்வொரு கட்டத்திலும் மாணவர்கள் அடைய வேண்டிய இலக்குகளில் எவற்றை அடைந்து கொண்டார்கள் எவற்றை அடையவில்லை என்பதனை உறிதிப்படுத்துவதுடன் மாணவர்களை அடுத்த கட்ட நிலைக்கு ஆயத்தம் செய்வதாக அமைகின்றது.

கற்பித்தலானது கல்விக்கான திறன்களையும் ஆற்றலினையும் உளச் செயற் பாட்டினையும் விருத்தி செய்வதற்கான ஒரு செயற்பாடாகும். இக்கற்பித்தலானது பொருத்தமான நோக்கங்களுடனும் இலக்குகளுடனும் தொடர்பு கொண்டவை. இவற்றை இயன்றவரை அடையும் வகையில் கற்பித்தலுக்கான அனுபவங்கள் உருவாக்கப்பட்டு இறுதியில் அவை நிறைவேறிய அளவினையும் தரத்தை யும் வெளிப்படுத்துவது மாணவர்களின் அடைவு ஆகும். கல்விக் கொள்கைகள், இலக்கு களின் வெற்றி, பாடசாலைகளின் தரம், கற்றல் கற்பித்தல் விளைதிறன் என்பவற்றை வெளிக்காட்டுபவையாக மாணவர்களின் கல்வி அடைவுகள் காணப்படுகின்றன.

மாணவர்களின் கல்வி சார் அடைவுகளை உயர்த்துவதற்கு பல்வேறு மட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளுகின்ற போதும் அவை எதிர்பார்த்த பலனைத் தருவதில்லை எனவே முதலில் மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை என்பதனை இனங்கண்டு இவற்றில் எவை கற்றலுக்குத் தடையாக இருக்கின்றன அவற்றை நீக்குவதன் மூலம்மாணவர்களின் கல்விசார் அடைவுகளை மேம்படுத்த முடியும். மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. கற்போனின் குடும்பச்சூழலுடன் தொடர்பு பட்டவை
2. பாடசாலை தொடர்பானவை.
3. கற்போன் சார்பானவை

குடும்ப சூழலுடன் தொடர்புடைய காரணிகளை ஆராயின் வீட்டுச் சூழலுடன் குடும்ப உறுப்பினர்களின் தொடர்புக்கான சூழலும் ஒரு மாணவனின் முறைசாரா கற்றலுக்கான இடமாக அமைகின்றது. பாடசாலைப் பாடத்திட்டங்களில் உள்ள பல விடயங்களை மீட்டல் செய்ய, மேலதிகமாகத் தேடிக்கற்றல், சந்தேகத்திற்கான விளக்கங்களைப் பெறல் கற்றலுக்கான உதவியைப் பெறல்,ஆக்கத்திறனை மேம்படுத்த போன்வற்றுடன் தொடர்புடைய விடயம் வீட்டுச் சூழலியே இடம் பெற வேண்டியள்ளது. இதற்கு ஏற்ப குடும்பசூழல் அமையும் பொழுது மாணவரின் கற்றல் செயற்பாட்டிலும் அடைவுமட்ட அளவீட்டிலும் மேம்பாடும் முன்னேற்றமும் ஏற்படக் கூடிய சூழல் ஏற்படும். குறிப்பாக பெற்றோரின் கல்வித்தகமை, குடும்ப உறுப்பினர்களின் கல்வி, கல்விசார் ஊக்குவிப்புக்கள், குடும்பத்தின் சமூக பொருளாதாரக் கட்டுமானம் பெற்றோரின் பிள்ளைகள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் பிள்ளைகளின் அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்துவதாக கல்விசார் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன.

மாணவர்களின் அடைவினைத் தீர்மானிக்கும் பாடசாலை தொடர்பான காரணிகளை ஆராயின் பாடசாலைகளின் பண்புத்தரத்தை வெளிக்காட்டும் முக்கிய குறிகாட்டிகளில் ஒன்று மாணவர்களின் அடைவுகள் ஆகும். பாடசாலை சார்பான காரணிகளை பின்வரும் அடிப்படையில் நோக்கலாம் தலைமைத்துவம் சார்ந்தவை கற்பிப்போன் சார்பானவை பாடசாலையின் பௌதீக வசதிகள் சார்பானவை விளைதிறனுடைய கற்றலுக்கான பாடசாலைததலைமைத்துவம் கற்றலின் அடைவை உயர்த்தும் அதிபரின் வாண்மை த்துவம் சரியான நேர முகாமைத்துவ ஒழுங்கமைப்பு கற்றலுக்கான வளங்களை எற்படுத்திக் கொடுத்தல் திறந்த மேற்பார்வைகள் கல்விக்கான உள்ளீடுகளை வழங்குதல் பாடக்கலைத்திட்டம் இணைக்கலைத் திட்டங்களை முகாமை செய்தல் கற்றதற்கான வசதிகளை வழங்குதல் போன்றன இதில் அடங்கும் கற்பிப்போன்சார்பான காரணிகளாக விளைதிறனான கற்பித்தல் முறைகள் பயன்படுத்தும் கற்பித்தல்சாதனங்கள் கல்வித்தகைமை கற்பித்தல் அனுபவம் பயிற்சியும் மேலதிக வகுப்புகள் பரிகார கற்பித்தல் கற்பித்தலுக்கான அர்ப்பணிப்பு விடைத்தாள் மதிப்பீட்டு அனுபவங்கள் போன்றவை மாணவரின்கற்றல் அடைவில் செல்வாக்கு செலுத்தும் பாடசாலையின் பௌதீக வசதிகள் தொடர்பான காரணிகளாக ஆசிரியர் ஆளணிப்பரம்பல் ஆசிரியர் மாணவர் விதம் கற்பித்தலுக்கான துணை வசதி(நூல் நிலையம் கற்பித்தல் நடைபெறும் இடம் திறன் விருத்திக்கான வசதி (போட்டிகள், கற்றலுக்கான வீட்டு வசதிகள் போன்றவையாகும்.

கற்போன் சார்பான காரணிகளை மாணவர்கள், உடல், உளநிலைகள், கற்றலுக்கான ஊக்கம், ஞாபகமாக்கல், தேடிக்கற்கும் ஆற்றல், கவனக்கல், தனியாள் ஆற்றல்

வேறுபாடுகளும் ஆளுமையும், கற்பதற்கான நேர்மனபாங்கு ஒழுக்கம் ஆசிரியருடனான உறவு, வாசிப்புத்திறன் போன்ற காரணிகள் கற்றலின் அடைவைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட காரணிகள் ஆகும்.

மேற்கூறப்பட்ட கல்விசார் அடைவுகளைத் தீர்மானிக்கும் காரணிகளில் எத்தகைய காரணிகள் மாணவர்களின் அடைவினை உயர்த்துவதற்குத் தடையாக இருக்கின்றது என்பதனை இனம் கண்டு அத்தடைகளை நீக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டங்களை உயர்த்தமுடியும்

உசாத்துணை நூல்கள்
1. கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்பாக வழிமுறைகன்
முனைவர் மா. கருணாநிதி
2. ஆசிரியரை வினைதிறன் மிக்கவராக்கல்
மா. சின்னத்தம்பி

# வணிக வனிதையின் 16ம் வெளியீடு

16ம் இதழாக பவனி வரும் வனிதையே
பகலவன் போல் ஒளி வீசி படர்கிறாய் எம் மத்தியிலே
வினோத காவியங்கள் கலைநயங்கள் கொண்டமைந்து
காலமெல்லாம் தனக்கென சிறந்திடுவாய் பூமியிலே

பொருளாதார மேம்பாடும் பொங்கி வரும் வளர்சியும்
கணக்கீடும் கணக்கெடுப்பும் காவியம் தான் உன்கையில்
தலை சிறந்த வல்லுனர்கள் தத்துவங்கள் போலவே
மாணவர்க்கு சொல்லிடுவாய் அருமையான வழிகளை

இந்துமகளிர் வெளியீட்டால் இன்முகமாக தோன்றிடுவாய்
ஈரெட்டாம் இதழாம் நீநா தெவிட்டா சுவை தருவாய்
திட்டங்கள் பல செய்து திகழவென உனைத்தோற்றுவித்தோம்
பட்டங்கள் பல பெற்றிட பணித்திடுவாய் எம்மவர்க்கு

அறிவுரைகள் முன்வைத்து ஆசிகளை தான் பெற்று
அகிலத்தில் தோன்றிடு அற்புதமான வனிதையே
நன் நான்காம் இதழென்று நம்மவர்கள் போற்றிடவே
திக்கெங்கும் திகழ்ந்திடுவாய் தீஞ்சுவை காவியமாய்

வளர்ந்திட்ட தொழில் நுட்பம் வஞ்சனை இன்றி வரைந்திடவே
வண்ணமயமாய் தோன்றி விட்டாய் வணிக மன்ற வனிதையே
மேன் மேலும் வளர்ந்து வரும் எம் மகளீர் வனிதையே
உன் சிறப்பு ஓங்கிடவே என்றும் நீ வாழ்க..... வாழ்க... வளர்கவே....

கி.அபிரா
2014 வர்த்தகப்பிரிவு

# செவ்வாயின் செந்தமிழால் செயலாளரின் நன்றிகள்



"செய்யாமல் செயத உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது"

யா/ இந்து மகளிர் கல்லூரியின் வணிக மன்றச் செயலாளர் என்ற வகையில் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இச்சஞ்சிகையின் இனிய வரவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்கிய வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், உதவிக்கல்விப் பணிப்பாளருக்கும் கல்லூரி முதல்வருக்கும் எம் சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவிபபதோடு சிறப்பான ஆக்கங்களை வழங்கி சஞ்சிகையை மெருகூட்டிய பழைய மாணவிகள், ஆசிரியர்கள் மாணவச் சகோதரிகள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்

சஞ்சிகை வெளியீட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய எமது பணி சிறப்புற உதவிய மன்றப்பொறுப்பாசிரியருக்கும் துறை சார்ந்த ஆசிரியர்களுக்கும் மனம் நிறைைந்த நன்றிகள்

அடுத்து சஞ்சிகை வெளியீட்டிற்கு விளம்பர அனுசரணை வழங்கிய ஈகையாளருக்கும், அன்பளிப்புகளை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் நிறைவான நன்றிகள்


எமது கனவை நனவாக்கி கற்பனைக்கு வடிவம் தந்து நேர்த்தியான முறையில் இம்மலர் வெளிவர அயராது உழைத்த கங்கை பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் அட்டைப் படத்தை வடிவமைத்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்

நாம் ஒவ்வொரு அடியையும் வெற்றிப்பாதையில் நகர்த்த தோளோடு தோள் நிற்றுழைத்த எம் கல்லூரிச் சகோதரிகளுக்கும் அன்பான நன்றிகள்

அத்துடன் வணிக வனிதை வெளியீட்டுக்கு எம்முடன் இணைந்து உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்

செல்வி கே. நிரோஜி
செயலாளர், வணிக மன்றம்,

உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு கேசத்திற்கேற்ற அதிநவீன
மோஸ்தர்களில் தரம் குன்றா தங்கப் பவுண் நகைகளை
செய்து பெற்றிடவாரீர்



# அசோகா
## நகை அகம்



ஓடர் நகைகள்
குறைந்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்


*இல: 111, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*
*தொலைபேசி : 0212226290*

# NEW SCIENCE HALL



## A/L கணித, உயிரியல்,
## தொழில்நுட்ப பிரிவு


*No:-134, கன்னாதிட்டி*
*யாழ்ப்பாணம்*



**பசு வதை ஒழிப்போம்**

# தேனு களஞ்சியம்

## THENU KALANCHIYAM




*இல: 29 நவீன சந்தை உட்புறம்*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்*
*தொலைபேசி : 0214921185, 0214921259*

Vazhka vaiyakam

Vazhka valamudan

# MAYOORA

GIFT CENTRE & DISTRIBUTERS



No: 14, New Market, Power House Road, Jaffna
Tel: 021 222 2084
Fax: 021 222 9151


RAJESWARY JEWELLS
22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன்
கிடைக்கும் இடம்
இராஜேஸ்வரி நகையகம்
271, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்


ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
புடவை வியாபாரம்
51 - 13, 14 பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 3139
021 222 8107


உயர்கல்விக்கான
உன்னத
நிறுவனம்
DCM
வேம்படி மகளிர் கல்லூரிக்கு
அருகாமையில்


கணினி
ஆங்கில
கல்விக்கு
DMI
COMPUTER EDUCATION
DiTEC
சர்வதேச, மூன்றாம் நிலைக்கல்வி,தொழிற்
கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
TVEC Reg.No.P25/0056
யாழ் மண்ணில் முன்னனி நிறுவனம்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel. 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி (HNB அருகில்) Tel.:021-227 0775

# எஸ்.என். கிருஷ்ணா ஜுவலஸ்ஸ்
## அன் நகைத்தொழிலகம்

உரிமையாளர்: எஸ்.நாககிருஷ்ணா (காலேப்)

## S.N.Krishna jewels & workshop



ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து பெற்றுக் கொள்ளலாம்

*74/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*
*தொலைபேசி : 0212221112, 0776082228*

## SHIVAN MOTORS STORES



Dulux
let's colour

**Distributors for:**
**AKZO NOBEL PAINTS LANKA (PVT)LTD.**
**HAYLEYS ELECTRONICS LIGHTING (PVT)LTD**

NO: 70/1Manipay Road,
Jaffna, Sri Lanka

Tel: +94212222763
Fax: +94212228647







AkzoNobel
Tomorrow's Answers Today

## கஜசங்கவி சென்ரர்



&

## பிறின்டர்ஸ்

Dealers in Indian wedding cards,
Visiting Cards & Offset printing,
Screen Printing



எம்மிடம் சகலவிதமான திருமண அழைப்பிதழ்கள்,
பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள்,
கேக் பெட்டிகள், அன்பளிப்புப் பொருட்கள்
என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.




*இல: 237 கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி: 0212227885*
*0776031071*


## சிவன் மாளிகை லிமிட்டட்

பித்தளை, அலுமினியம்,எவர் சில்வர், எனாமல்,
பிளாஸ்ரிக், வீட்டுப் பாவனைப் பொருட்கள்,
கோயில் பொருட்கள்
மலிவாகக் கிடைக்கும்









*166, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி: 0212222996*


## MAKARANI PADDU SOLAI

## மகாராணி பட்டுச் சோலை



*50, பெரியகடை.*
*யாழ்ப்பாணம்*
*தொலைபேசி : 021 222 3104*


மலரை வாழ்த்துகின்றோம்



DSI பாதணிகளின் வட மாகாணத்திற்கான
ஏக விநியோகஸ்தர்கள்



## சுப்ப ஆஸ்
## 154, நாவலர் வீதி,
## யாழ்ப்பாணம்
## 021 222 6809




சிவகணேசன்
ரெக்ஸ் ரெயில்ஸ்

யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான
ஜவுளிகளின் மனம் கவர் மாளிகை
சிவகணேசன் ரெக்ஸ் ரெயில்ஸ்

**SIVAKANESAN TEXTILES**

No:-Grand Bazaar,
Jaffna
Tel: 0212222063



பாரத்
டிஜிற்றல் ஸ்ருடியோ
**Barath Digital Studio**



டிஜிற்றல் பாஸ்போர்ட் போட்டோ, அடையாள
அட்டை போட்டோ, லைசென்ஸ் போட்டோ
இந்தியன் விசா, பிரேமிங் மற்றும் புகைப்படத்
தேவைகள் அனைத்தும்
சிறந்த முறையில் செய்து தரப்படும்

82/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே: 0217903572


# எங்கள் விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்

வணிக மாணவர் மன்றம்
யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி



" It's fine to celebrate success but it is more important to heed the lessons of failure "

- Bill Gates

Hangai printers - 0776184567